شرح الدروس المهمة - تاميلي

# முக்கியமான பாடங்கள்

# - ஒரு விளக்கம் -



جمعية الدعوة بالزلفي


جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالزلفي

هاتف: ٠١٦ ٤٢٣٤٤٦٦ - فاكس: ٠١٦ ٤٢٣٤٤٧٧


133

# முக்கியமான பாடங்கள் - ஒரு விளக்கம்

# شرح الدروس المهمة

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات في الزلفي
Tel: 966 164234466 - Fax: 966 164234477

**شرح الدروس المهمة**
**تأليف فضيلة الشيخ / عبد العزيز بن داود الفايز**
**ترجمه إلى اللغة التاميلية:**
جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالزلفي
الطبعةالرابعة : ١٤٤٢/٨ هـ.

ح **شعبة توعية الجاليات بالزلفي، ١٤١٧هـ**

فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر
الفايز ، عبد العزيز بن داود
شرح الدروس المهمة لعامة الأمة - الزلفي
٩٤ ص؛ ١٢ × ١٧ سم
ردمك : ٢-٢٨ - ٨١٣ - ٩٩٦٠
(النص باللغة التاميلية )
١- الإسلام -مبادىء عامة ٢- الثقافة الإسلامية أ. العنوان
ديوي ٢١١ ١٧/٢٧١٤

**رقم الإيداع : ١٩/٤٣٠٥**

**ردمك : ٩- ٥٠ - ٨١٣ - ٩٩٦٠**

# உள்ளே...


| | |
|---|---|
| 5 | சூரத்துல் ஃபாத்திஹாவும் சிறிய சூராக்களும் |
| 8 | இரண்டு சாட்சிகள் பற்றிய விளக்கம் |
| 14 | லாயிலாஹ இல்லல்லாஹ்வின் நிபந்தனைகள் |
| 18 | ஈமானின் கடமைகள் |
| 34 | தவ்ஹீதின் வகைகள் |
| 35 | ஷிர்க்கின் வகைகள் |
| 39 | இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள் |
| 43 | தொழுகையின் நிபந்தனைகள் |
| 46 | தொழுகையின் ருகுன்கள் |
| 52 | தொழுகையின் வாஜிபுகள் |
| 55 | அத்தஹிய்யாத்து |
| 61 | தொழுகையின் சுன்னத்துகள் |
| 64 | தொழுகையை வீணாக்கக்கூடியவை |
| 66 | உளூவின் நிபந்தனைகள் |
| 68 | உளூவின் ஃபர்ழுகள் |
| 72 | உளூவை நீக்கும் காரியங்கள் |
| 77 | சில நற்குணங்கள் மற்றும் ஒழுக்கங்கள் |
| 82 | ஷிர்க் மற்றும் அனைத்து வகைப் பாவங்களை விட்டும் எச்சரித்தல் |
| 86 | மய்யித்தை அடக்கம் செய்வதற்கான முன்னேற்பாடுகள், தொழுவித்தல், அடக்கம் செய்தல் |

# شرح الدروس المهمة

# முக்கியமான பாடங்கள்- ஒரு விளக்கம்

## பாடம் - 1

**ஸூரத்துல் பாத்திஹாவையும் ஸூரத்துஸ் ஸல்ஸலா விலிருந்து ஸூரத்துன் நாஸ் வரையுள்ள சிறிய ஸூராக் களையும் திருத்தமாக ஓதச் சொல்லிக் கொடுக்கவும், அவற்றை மனனம் செய்விக்கவும், அவற்றில் அவசியம் அறிந்து கொள்ள வேண்டியதை விளக்கி வைக்கவும் வேண்டும்.**

---

பேரறிஞர் ஷைக் அப்துல் அஸீஸ் பின் அப்துல்லாஹ் பின் பாஸ் அவர்கள் (அல்லாஹ் அவர்களுக்கு மகத்தான கூலியை வழங்குவானாக!) முதல் பாடத்தில் முஸ்லிம்கள் அனைவரும் ஸூரத்துல் பாத்திஹாவையும் தம்மால் இயன்ற சிறிய ஸூராக்களையும் அவரவர் சக்திக்கேற்ப கற்றுக் கொள்வது அவசியமாகும் எனக் கூறியுள்ளார்கள். ஏனெனில் ஆதாரப்பூர்வமான நபி மொழியில் வந்துள்ளதுபோல் ஸூரத்துல் பாத்திஹாவை ஓதாதவருக்குத் தொழுகை இல்லை.

இந்த ஸூராக்களை மக்களுக்குப் போதிப்பவர் கீழ்க் காணும் வழிமுறையைக் கடைபிடிக்க வேண்டும்.

அவர்கள் ஓதத் தெரியாதவர்களாக இருந்தால் அவர்களுக்கு ஓதிக்காட்ட வேண்டும். ஓதத் தெரிந்தவர் களாக இருந்தால் அந்த நிலையிலிருந்து இரண்டாம்

நிலைக்கு வருவது அவ்வாசிரியருக்குக் கடமையாகும். அந்த இரண்டாம் நிலை என்பது அவர்களைச் சரியாக ஓதவைப்பதாகும். பின்பு மூன்றாம் நிலைக்குத் திரும்ப வேண்டும். அது இந்த அத்தியாயங்களை அவர்களுக்கு மனனம் செய்ய வைப்பதாகும்.

மனனம் செய்ய வைப்பதற்குப் பல வழிகள் உள்ளன. அவற்றில் ஒன்று, ஆசிரியர் வசனங்களை நிறுத்தி நிதானமாக, ஓதிக் காண்பித்து மக்கள் அதை மனனம் செய்து கொள்ளும் வரை தன்னுடன் சேர்ந்து திரும்பத் திரும்ப ஓதும்படிக் கூற வேண்டும். இதன் பின் ஆசிரியர் அவர்கள் விளங்கிக் கொள்ளுமளவிற்கு அந்த வசனங் களின் பொருளை தெளிவாக விளக்க வேண்டும். அதன் பின்னர், தான் படித்துக் காட்டிய வசனங்களின் சில சட்டங்களை எடுத்துரைக்க வேண்டும்.

உதாரணமாக ஸூரதுல் பாத்திஹாவை எடுத்துக் கொண்டால் "ஸூரதுல் பாத்திஹாவை ஓதுவது தொழுகையின் மிக முக்கியக் கடமைகளில் ஒன்றாகும். ஏனெனில் "ஸூரதுல் பாத்திஹாவை ஓதாதவருக்கு தொழுகை இல்லை" என நபி(ஸல்) அவர்கள் கூறியுள் ளார்கள்" (புகாரி 756, முஸ்லிம் 394) என்று அவர்களுக்கு விளக்க வேண்டும்.

இவ்வாறே, அல்லாஹ் தனக்கு என்னென்ன பெயர்கள், பண்புகள் இருப்பதாகக் கூறியுள்ளானோ அல்லது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கு என்னென்ன பெயர்கள்,

பண்புகள் இருப்பதாகக் கூறியுள்ளார்களோ அவற்றை மாற்றாமல், ஒப்பாக்காமல், உவமையாக்காமல், இன்ன விதத்தில் என்று விவரித்துக் கூறாமல் அப்படியே நம்ப வேண்டுமென்றும், மேலும் அல்லாஹ்வும் அவன் தூதரும் அல்லாஹ்வுக்கு எதெல்லாம் இல்லையெனக் கூறினார் களோ அவற்றை அவ்வாறே நம்ப வேண்டுமென்றும் நம் முன்னோர்கள், இமாம்கள் ஆகியோர் ஏகமனதாக முடிவெடுத்துள்ள அடிப்படை என்பதையும் ஆசிரியர் அவர்களுக்குச் சொல்ல வேண்டும்.

அதன் பிறகு, “வணக்கம் என்பது அல்லாஹ் விரும்பு கின்ற மற்றும் பொருந்திக் கொள்கின்ற வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான சொல், செயல்கள் அனைத் திற்கும் சொல்லப்படும்” என்பதையும் அவர்களுக்குச் சொல்ல வேண்டும். வணக்கத்துடன் ஷிர்க் எனும் இணை வைப்பு கலந்துவிடுமானால் வணக்கம் பாழாகிவிடும் என ஆசிரியர் விளக்க வேண்டும். இதுவும் ஸூரத்துல் பாத்திஹாவிலுள்ள சட்டங்களில் உள்ளதுதான்.

இதுபோல ஒரு முஸ்லிம் மறுமை நாளை எண்ணிப் பார்ப்பதும் அவசியமாகும். அந்த மாபெரும் நாளை மறக்காமலிருப்பது வணக்க வழிபாடுகளைச் செய்வ தற்கும், விலக்கப்பட்டவைகளைத் தவிர்ந்து கொள்வ தற்கும் மனிதனுக்கு உதவியாக இருக்கும் என்பதையும் ஆசிரியர் அவர்களுக்கு விளக்கிக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறே ஏனைய ஸூராக்களிலும் நடந்து கொள்ள வேண்டும்.

**பாடம் - 2**

**லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல் லாஹ் (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. முஹம்மது நபி அவர்கள் அல்லாஹ் வின் தூதராவார்கள்.) என சாட்சி சொல்ல வேண்டும். அத்துடன் அதன் விளக்கத்தையும் லாஇலாஹ இல்லல் லாஹ்வின் நிபந்தனைகளையும் அறிந்து கொள்ள வேண்டும். லாஇலாஹ- வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை- என்பதில் அல்லாஹ்வை விடுத்து வணங்கப் படக்கூடிய அனைத்தையும் நிராகரித்தல் எனும் கருத்து உள்ளது. இல்லல்லாஹ்- அல்லாஹ்வைத் தவிர- என்பதில் வணக்கத்திற்குரிய தகுதி அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு. வணக்க வழிபாடுகளை அவனுக்கே உரித்தாக்க வேண்டும். அவனுக்கு இணை, துணை எதுவும் இல்லை என்ற கருத்து இருக்கின்றது.**

---

இந்தப் பாடத்தில் மூலாசிரியர் “லாஇலாஹ இல்லல் லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்” எனச் சாட்சி சொல்வது பற்றிக் கூறியுள்ளார். இதன் விளக்கத்தை பின் வருமாறு வகைப்படுத்தலாம்.

**1. இக்கலிமாவுக்குரிய அந்தஸ்து**

இக்கலிமாவை மொழிதல் இஸ்லாமிய அடிப்படைக் கடமைகளில் முதல் கடமையாகும். “இஸ்லாம் ஐந்து அடிப்படைக் கடமைகள் மீது நிறுவப்பட்டுள்ளது. அவை, வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என்றும் முஹம்மது நபி அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்றும் உறுதியாக நம்புவது, தொழுகையை நிலை நாட்டுவது, ஸகாத் கொடுப்பது, ஹஜ் செய்வது ரமழானில் நோன்பு நோற்பது ஆகியனவாகும்” என நபி(ஸல்) கூறினார்கள். (புகாரி-8)

எனவே இந்த ஏகத்துவக் கலிமாதான் மார்க்கத்திற்கு அடிப்படையும், அதன் உறுதிவாய்ந்த கோட்டையும் ஆகும். இதுவே அடியானின் முதல் கடமையுமாகும். நற்செயல்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படுவது இக்கலிமாவை மொழிந்து இதன் தேட்டத்திற்கேற்ப செயல்படுவதில் தான் இருக்கின்றது.

## 2. இதன் பொருள்

உண்மையில் வணங்கப்படுவதற்குத் தகுதியான இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதாகும். இதன் பொருள், படைப்பவன் அல்லாஹ் வைத் தவிர வேறு யாருமில்லை என்றோ அல்லது நிலையானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என்றோ அல்லது உணவளிப்பவன் அல்லாஹ் வைத் தவிர வேறு யாருமில்லை என்றோ கூறக்கூடாது. ஏனெனில் குறைஷி இணைவைப்பாளர்கள், அல்லாஹ்

தான் படைப்பாளன் (மற்றும் உணவளிப்பவன்) என்பதை மறுக்கவில்லை. அவ்வாறிருந்தும் இந்த நம்பிக்கை அவர் களுக்கு எந்தப் பலனையும் அளிக்கவில்லை. மேலும் இதன் பொருளை அவர்கள் விளங்கியே இருந்தனர். அதனால் தான் நபி(ஸல்)அவர்கள், அந்த மக்களிடம் "லாஇலாஹ இல்லல்லாஹ் எனக் கூறுங்கள்" என்று கூறியபோது அதனை அவர்கள் ஏற்க மறுத்தனர்.

நமக்கு ஆச்சரியம் என்னவெனில் இக்காலத்தில் பலரும் லாஇலாஹ இல்லல்லாஹ் எனக் கூறுகிறார்கள். ஆனால் இதன் பொருளை அறிவதில்லை. மேலும் அல்லாஹ்வுடன் அவ்லியாக்களையும் சமாதிகளில் உள்ளவர்களையும் அழைத்துப் பிரார்த்திக்கிறார்கள். மேலும் தாங்கள் ஏகத்துவவாதிகள் எனவும் பீற்றிக் கொள்கிறார்கள். அல்லாஹ் தான் இவர்களுக்கு வழி காட்ட வேண்டும்.

**3. இதன் கூறுகள்**

இக்கலிமாவுக்கு இரண்டு கூறுகள் உள்ளன.

**1. எதிர்மறை.** "லாஇலாஹ" என்ற சொல்லில் அல்லாஹ்வைத் தவிர ஏனைய அனைத்திற்கும் வணக் கத்திற்குரிய தகுதி இல்லையென மறுக்கப்படுகின்றது.

**2. உடன்பாடு.** "இல்லல்லாஹ்" என்ற சொல்லில் வணக்கத்திற்குரிய தகுதி அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே உண்டு என உறுதிப்படுத்தப்படுகின்றது.

**4. இக்கலிமாவின் சிறப்பு**

இக்கலிமாவுக்கு மகத்தான சிறப்புகள் உள்ளன. அல்லாஹ்விடம் இதற்கு உயர்ந்த அந்தஸ்து உள்ளது. இக்கலிமாவை வாய்மையுடன் யார் மொழிந்தாரோ அவரை அல்லாஹ் சொர்க்கத்தில் நுழையச் செய்வான். இதை எவன் பொய்யாகக் கூறுகிறானோ அவனது உயிருக்கும் உடமைக்கும் இவ்வுலகில் பாதுகாப்புண்டு. மறுமையில் அவனுடைய கணக்கு அல்லாஹ்விடம் இருக்கும். அவன் விஷயத்தில் நயவஞ்சகர்களின் சட்டம் அமுல்படுத்தப்படும். இக்கலிமா சுருக்கமான வார்த்தை களைக் கொண்டதும், குறைந்த எழுத்துக்களையு டையதும், சொல்வதற்கு எளிதானதும் (நன்மையின்) தராசை கனக்கச் செய்யக்கூடியதுமாகும்.

இந்த மகத்துவமிக்க கலிமாவுக்கு அநேக சிறப்புகள் உள்ளன. ஹா.ஃபிழ் இப்னு ரஜப் (ரஹ்) அவர்கள் தமது "கலிமத்துல் இக்லாஸ்" என்ற நூலில் சிலவற்றை ஆதாரத்துடன் குறிப்பிட்டுள்ளார்கள். அவற்றுள் சில வருமாறு:

இக்கலிமா சொர்க்கத்தின் விலையாகும். யாருடைய இறுதி வார்த்தை "லாஇலாஹ இல்லல்லாஹ்" என ஆகிவிடுகிறதோ அவர் சொர்க்கம் செல்வார். இக்கலிமா நரகிலிருந்து பாதுகாக்கக்கூடியதாகும். இதன் மூலம் கட்டாயம் பாவமன்னிப்பு கிடைக்கும். இக்கலிமா நன்மை களில் மிகச் சிறந்ததும், பாவங்களை அழித்துவிடக் கூடியதும், அல்லாஹ்வின் பக்கம் செல்வதற்குரிய

தடையை- புரோகிதத்தைத் தகர்க்கக் கூடியதுமாகும். இக்கலிமாவைக் கூறியவனை அல்லாஹ் உண்மைப் படுத்துவான். நபிமார்கள் கூறியதில் இதுவே மிகச் சிறந்தது. இக்கலிமா மிகச் சிறந்த திக்ர் ஆகும். அமல் களில் மிகச் சிறந்ததாகும்!

நற்கூலியை பெரும்பாலும் பன்மடங்காக்குவது இக்கலிமா தான். இது அடிமைகளை விடுதலை செய்வதற்கு நிகரானது. ஷைத்தான், கப்ரின் தனிமை, மறுமையின் பயங்கரங்கள் ஆகியவற்றை விட்டும் பாது காக்கும். மு.்.மின்கள் தம் கப்ருகளிலிருந்து எழுந்து வருகிறபோது அவர்களின் அடையாளமாக இக்கலிமா இருக்கும். இதைக் கூறியவனுக்கு சொர்க்கத்தின் எட்டு வாயில்கள் திறக்கப்படும். அவன் விரும்பிய எந்த வாயில் வழியாகவும் அதில் அவன் நுழையலாம் என்பதும் இக்கலிமாவின் சிறப்புக்களில் உள்ளதாகும். இக்கலிமா வின் சிறப்புக்களில் இதுவும் ஒன்றாகும். அதாவது இதை மொழிந்தவர்கள் இதன் கடமைகளில் தவறிழைத் ததனால் நரகம் சென்றாலும் அதிலிருந்து வெளியேற்றப் படுவது நிச்சயம்.

**5. முஹம்மது நபியவர்கள் அல்லாஹ்வின் தூதரெனச் சாட்சி சொல்வது.**

முஹம்மது நபியவர்களை நம்புதல், அவர்களின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல், அவர்கள் அறிவித்த செய்திகளை உண்மைப்படுத்துதல், அவர்கள் விலக்கிய

கண்டித்த தீமைகளிலிருந்து விலகுதல், அவர்களுடைய ஏவல், விலக்கல்களைக் கண்ணியப்படுத்துதல், அவர்களின் சொல்லை விட வேறு யாருடைய சொல்லுக்கும் முன்னுரிமை தராதிருத்தல் ஆகிய அனைத்தையும் இந்த சாட்சியம் உள்ளடக்குகின்றது.

**6. மற்றொரு சாட்சியம்**

“வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை, துணை யாருமில்லை. முஹம்மது நபியவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவன் தூதருமாவார்கள் எனவும், ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், அவனது தூதரும், மர்யமிடம் அவன் போட்ட கட்டளையால் உருவானவரும், அவனது உயிரும் ஆவார். மேலும் சொர்க்கமும் உண்மையே, நரகமும் உண்மையே எனவும் யார் சாட்சி சொல்கிறாரோ அவர் அவரது செயலைப் பொறுத்து சொர்க்கம் செல்வார்” என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறே உபாதா பின் ஸாமித்(ரலி) அறிவிக்கும் நபிமொழியில் உள்ளது.

**லாஇலாஹ இல்லல்லாஹ்வின் நிபந்தனைகள் எட்டு. அவை: அறிதல், உறுதி கொள்ளல், மனத்தூய்மை, வாய்மை, நேசித்தல், கீழ்ப்படிதல் ஏற்றுக் கொள்ளல், அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுகின்ற அனைத்தையும் நிராகரித்தல் ஆகியனவாகும்.**

---

ஏகத்துவக் கலிமாவுக்கு ஏழு நிபந்தனைகளை அறிஞர்கள் கூறியுள்ளனர். மூலாசிரியரைப்போல சிலர் எட்டு என்றும் கூறியுள்ளனர்.

**1. அறிவு:** ஒரு அடியான், அல்லாஹ் மட்டுமே வணக்கத்திற்குரியவன்; மற்றவர்களை வணங்குவது தவறானது என அறிந்து, அதற்கேற்ப செயல்பட்டால் அவன் இதன் பொருளை நன்கு அறிந்தவனாவான்.

வணக்கதத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதை நீர் அறிந்து கொள்வீராக! (47:19)

சத்தியத்தை அறிந்தவர்களாக அதற்கு சாட்சி கூறிய வர்களைத் தவிர. (43:86)

“அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என அறிந்தவராக யாரேனும் மரணித்து விட்டால் அவர் நிச்சயம் சொர்க்கம் செல்வார்” என நபி (ஸல்) கூறினார்கள். (முஸ்லிம் 26, அஹ்மத் 434)

**2. உறுதி:** இக்கலிமாவை மொழிந்தவன் இதனை தனது உள்ளத்திலும் உறுதி கொள்ள வேண்டும். மேலும் தான் எதைக் கூறுகிறானோ அது சரியானது என்பதை உறுதியாக நம்ப வேண்டும். அது இது தான். “அல்லாஹ்வுக்குரிய இறைத்தன்மை தான் சரியானது! அது அவனுக்குத் தகுதியானதும் கூட. அவனல்லாத வற்றுக்கும் இறைத்தன்மை இறுப்பதாக நம்புவது தவறானதாகும்.”

(நபியே!) அவர்கள் உமக்கு அருளப் பெற்ற (இவ் வேதத்) தையும் உமக்கு முன்னர் அருளப்பட்டதையும் அவர்கள் நம்புவார்கள். மறுமையையும் அவர்கள் உறுதியாக நம்புவார்கள். (அல்குர்ஆன் 2:4)

“இத்தோட்டத்திற்கு அப்பால் உன்னை சந்திப்பவர் வணக்கத்திற்குரியன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என உள்ளத்தில் உறுதியாக நம்பி சாட்சியம் கூறினால் அவருக்கு சொர்க்கம் உண்டென்று சுபச் செய்தி சொல்” என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்கள். (முஸ்லிம் 31)

**3. ஏற்றுக் கொள்ளுதல்:** இக்கலிமாவின் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் உள்ளத்தால் உறுதி கொண்டு, நாவால் மொழிந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.

“அல்லாஹ்வையும் எங்களுக்கு அருளப்பட்ட (இவ் வேதத்) தையும் நம்பினோம்” எனக் கூறுங்கள் (2:136)

**4. கீழ்ப்படிதல்:** அதாவது இந்த மகத்துவமிக்க கலிமா எதை அறிவிக்கின்றதோ அதற்கு கீழ்ப்படிதல் என்பதாகும். “தன் முகத்தை அல்லாஹ்வுக்குப் பணியச் செய்து, நல்லறம் செய்து, உண்மை வழியில் நின்ற இப்றாஹீமின் மார்க்கத்தைப் பின்பற்றி நடந்தவரை விட அழகிய மார்க்கத்திற்குரியவர் யார்?” (அல்குர்ஆன் 4:125)

நன்மை செய்த நிலையில் தமது முகத்தை அல்லாஹ்வை நோக்கித் திருப்புபவர் பலமான கயிற்றைப் பிடித்துக் கொண்டார். (அல்குர்ஆன் 31:22)

**5. உண்மை:** அதாவது ஒருவன் தனது நம்பிக்கையில் அல்லாஹ்வுடன் உண்மையாக நடந்து கொள்வதாகும். அதுபோல தனது அடிப்படைக் கொள்கை, சொல், செயல், அழைப்புப் பணி முதலியவற்றிலும் உண்மையாளனாக இருக்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: "நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வை அஞ்சுங்கள். நீங்கள் உண்மையாளர் களுடன் இருங்கள்." (9:119)

**6. வாய்மை:** தனது சொல், செயல்கள் அனைத்தும் உளத்தூய்மையுடன் அல்லாஹ்வின் திருமுகத்திற்காக வும் அவனது திருப்பொருத்தத்தை நாடியும் அமைய வேண்டும். அதில் எந்தக் கலப்படமும் இருக்கக்கூடாது.

அல்லாஹ் கூறுகிறான்: "வணக்கத்தை அல்லாஹ் வுக்கே தூய்மையாக்கியவர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும் என்றே அவர்கள் ஏவப் பட்டுள்ளார்கள்." (98:5)

"மறுமையில் மக்களில் என் பரிந்துரைக்குத் தகுதி பெற்றவர் உளத்தூய்மையுடன் லாஇலாஹ இல்லல் லாஹ் எனக் கூறியவரே" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி(99), அஹ்மத்(8503)

**7. நேசித்தல்:** அதாவது இக்கலிமாவையும் இதன் எதிர்பார்ப்பையும் இது எதை அறிவிக்கிறதோ அதையும் நேசிப்பதாகும். அந்த வகையில் அல்லாஹ்வையும்

அவனது தூதரையும் நேசிக்க வேண்டும். மற்ற எல்லா வற்றினுடைய நேசத்தை விட இவ்விருவரின் நேசத்துக்கே முன்னுரிமை வழங்க வேண்டும்.

“அல்லாஹ்வையன்றி பல இணை (கடவுள்) களை ஏற்படுத்திக் கொண்டு அல்லாஹ்வை நேசிப்பது போல அவர்களை நேசிப்போரும் மனிதர்களில் உள்ளனர். நம்பிக்கை கொண்டோர் அல்லாஹ்வை (அவர்களை விட) அதிகம் நேசிக்கிறார்கள்.” (அல்குர்ஆன் 2:165)

8. **அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுகின்ற அனைத்தையும் நிராகரித்தல்:** “எவர் லாஇலாஹ இல்லல்லாஹ் எனக் கூறி அல்லாஹ்வை விடுத்து வணங்கப்படுகின்ற அனைத்தையும் நிராகரிக்கின்றாரோ அவரது உயிரும் உடைமையும் புனிதமாகும். அவரது கணக்கு அல்லாஹ்விடம் உள்ளது” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் 23 அஹ்மத் 15313)

## பாடம் - 3

**ஈமானின் கடமைகள்: ஈமானின் கடமைகள் ஆறு. அவை அல்லாஹ்வையும், அவனது வானவர்களையும், அவனது வேதங்களையும், அவனுடைய தூதர்களை யும், இறுதி நாளையும், நன்மை, தீமையாவும் அவன் விதிப்படியே நடக்கின்றன என்பதையும் நம்புவதாகும்.**

---

இதற்கு ஆதாரம் ஈமான் பற்றி நபி(ஸல்)அவர்களிடம் ஜிப்ரீல்(அலை) கேட்ட பிரபலமான ஹதீஸாகும். அதற்கு

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஈமான் என்பது அல்லாஹ்வையும், அவனது வானவர்களையும், அவனது வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதி நாளையும், விதியையும் - அதில் நல்லதையும் கெட்ட தையும் நீ நம்புவதாகும். (முஸ்லிம் 8)

**1. அல்லாஹ்வை நம்புதல்:**

அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வது நான்கு விஷயங்களை உள்ளடக்கியுள்ளது.

**1. அல்லாஹ் இருப்பதாக நம்புவது:**

இயல்பும், பகுத்தறிவும், இறைமார்க்கமும், புலனு ணர்வும் அல்லாஹ் இருக்கிறான் என்பதை அறிவிக் கின்றன.

அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு இயல்பின் ஆதாரமாவது: ஒவ்வொரு படைப்பினமும் தன்னைப் படைத்த இறைவனை நம்பும் இயல்புடனேயே படைக்கப் பட்டுள்ளன. இந்த உணர்வு சிந்தனையூட்டலோ கற்றுக் கொடுத்தலோ இல்லாமலேயே அவற்றிடம் அமைந் துள்ளன. “பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் இறை வனை நம்பும் இயல்புடனேயே பிறக்கின்றது. ஆனால் அதனின் பெற்றோர்தான் அதனை யூதனாகவோ, கிறிஸ் தவனாகவோ, நெருப்பு வணங்கியாகவோ மாற்றிவிடு கின்றனர்” என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி 1358, முஸ்லிம் 2658)

அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு பகுத்தறிவின் ஆதாரமாவது: படைக்கப்பட்ட முந்தைய பிந்தைய படைப்பினங்கள் அனைத்திற்கும் அவற்றைப் படைத்த படைப்பாளன் ஒருவன் இருப்பது அவசியம். ஏனெனில் இப்படைப்பினங்கள் தம்மைத் தாமே உண்டாக்கிக் கொண்டன என்பது சாத்தியமில்லை. மேலும் அவை திடீரென உருவாக்கப்பட்டன என்பதும் சாத்தியமில்லை.

அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு இறைமார்க்கத்தின் ஆதாரம்: இறைவன் இறக்கிய வேதங்கள் அனைத்தும் இவ்வுண்மையை மொழிகின்றன. அவ்வேதங்களில் மகத்தானதும் சிறந்ததும் திருக்குர்ஆனாகும். இவ்வாறே எல்லா இறைத்தூதர்களும், இறைத்தூதர்களின் தலைவரும் அவர்களில் இறுதியானவரும் மிகச் சிறந்த வருமான முஹம்மது நபி(ஸல்) அவர்களும் இவ்வுண் மையின் பக்கமே மக்களுக்கு வழிகாட்டியுள்ளனர். இதனைத் தெளிவாக மக்களுக்கு விளக்கியும் உள்ளனர்.

அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு புலனுணர்வின் ஆதாரங்கள் இரு கோணங்களிலாகும்:

ஒன்று: பிரார்த்தனை செய்பவர்களின் பிரார்த்தனை ஏற்கப்படுவதையும் துன்பத்திற்குள்ளானோர் காப்பாற்றப் படுவதையும் நாம் கேள்விப்படுகிறோம், கண்கூடாகப் பார்க்கவும் செய்கிறோம். அல்லாஹ் இருக்கிறான் என்று உறுதியாக அறிவிக்கக்கூடிய ஆதாரங்களாகும் இவை.

இரண்டு: நபிமார்களுக்கு வழங்கப்பட்ட சான்றுகள் - அவை மு.்.ஜிஸாத் (அற்புதங்கள்) என்று சொல்லப்படு கின்றன. மக்கள் அவற்றை நேரடியாகக் காண்கிறர்கள் அல்லது கேள்விப்படுகிறார்கள்- இத்தகைய சான்றுகள் உலகத்தைப் படைத்து அதை நிர்வகிக்கூடிய ஒருவன் இருக்கிறான்; அவனே அல்லாஹ் என்பதற்கு உறுதியான ஆதாரமாகும்.

**2. அல்லாஹ்வின் படைத்துப் பரிபாலிப்பாலிக்கும் ஆற்றலை நம்புவது:**

அதாவது படைத்துப் பரிபாலிப்பவன் அவன் ஒருவனே. அவனுக்கு இணை, துணை யாருமில்லை என்று நம்புவது. இங்கு "படைத்துப் பரிபாலிப்பவன்" என்பதற்கு "ரப்பு" எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. "ரப்பு" என்றால் படைப்பாற்றல், ஆட்சியதிகாரம் கட்டளை பிறப் பிக்கும் அதிகாரம் ஆகியன உடையவன். எனவே அல்லாஹ்வைத் தவிர வேறு படைப்பாளன் யாரும் இல்லை. அவனையன்றி வேறு ஆட்சியதிபதி எவரும் இல்லை. கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமும் அவனுக்கே யன்றி வேறு யாருக்குமில்லை.

அல்லாஹ் கூறுகிறான்: அறிந்து கொள்ளுங்கள்! படைத்தலும், கட்டளையும் அவனுக்கே உரியன. (7:54)

அவனே அல்லாஹ்! உங்கள் இறைவன்! அவனுக்கே அதிகாரம்! அவனையன்றி நீங்கள் யாரை அழைக்கி

றீர்களோ அவர்கள் அணுவளவும் அதிகாரம் படைத்த வர்களல்லர். (35:13)

**3. அல்லாஹ் வணக்கத்திற்குரியவன் என்று நம்புவது:**

அதாவது அவன் மட்டுமே உண்மையான, வணக்கத் திற்குரிய இறைவன். அவனுக்கு இணை, துணை ஏதும் மில்லை என நம்புவது. இங்கு இறைவன் என்பதற்கு அரபியில் “அல்இலாஹ்” எனும் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. அது அல்ம.:.லூஹ் என்ற அர்த்தத்தில் வருகிறது. இதன் பொருள் உள்ளன்புடனும் கண்ணி யத்துடனும் வழிபாடு செலுத்தப்படும் இறைவன் என்பதாகும். அல்லாஹ் கூறுகிறான்:

உங்கள் வணக்கத்திற்குரியவன் ஒரே ஒரு இறைவனே! அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரு மில்லை. (அவன்) அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்பு டையோன். (2:163)

நிச்சயமாக நாம் நூஹை அவரது சமுதாயத்திடம் அனுப்பி வைத்தோம். அவர் கூறினார்: என் சமுதாயமே! அல்லாஹ்வை வணங்குங்கள். உங்களுக்கு அவனன்றி வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. (7:59)

**4. அல்லாஹ்வின் பெயர்களையும் பண்புகளையும் நம்புவது:**

அதாவது அல்லாஹ் தனது வேதத்தில் தனக்கு என்னென்ன பெயர்களை, குணங்களைக் கொடுத்துள் ளானோ அல்லது நபி(ஸல்)அவர்கள் தம் ஹதீஸ்களில்

விளக்கியுள்ளார்களோ அவற்றை அல்லாஹ்வுக்கு- மாற்றாமல், மறுக்காமல், ஒப்பாக்காமல், விவரிக்காமல் அவனுக்கேற்ற முறையில்- அப்படியே கொடுப்பது.

அவனைப்போல் எதுவுமில்லை. அவன் (யாவற் றையும்) செவியேற்பவன், பார்ப்பவன். (42:11)

**அல்லாஹ்வை நம்புவதால் ஏற்படும் பயன்கள்**

அ. அல்லாஹ் ஒருவன் எனும் ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக் கொள்ளல், அவனல்லாதவரிடம் ஆதரவும் அச்சமும் கொள்ளப்படாத வகையிலும் மேலும் அவனல்லாதவருக்கு வழிபாடு செலுத்தப்படாத வகை யிலும் அதில் உறுதியாக இருத்தல்.

ஆ. அல்லாஹ்வை அவனுடைய அழகிய திருப் பெயர்கள் மற்றும் உயர்ந்த பண்புகளுக்குத் தோதுவாக பரிபூரணமாக நேசித்தல் மற்றும் மகத்துவப்படுத்தல்.

இ. அவன் ஏவிய ஏவல்களை எடுத்து நடந்து, அவன் விலக்கிய விலக்கல்ளை விட்டும் தவிர்ந்து கொள்வதன் மூலம் வழிபாட்டை உறுதிப்படுத்துதல்.

**2. மலக்குகளை நம்புவது**

**அ. மலக்குகள் பற்றிய விளக்கம்:**

மலக்குகள் நம் கண்களுக்குப் புலப்படாத ஒரு படைப்பினம். அல்லாஹ்வை வணங்கக்கூடியவர்கள். படைத்துப் பரிபாலிக்கும் சிறப்புத் தன்மைகளோ கடவுள் தன்மைகளோ எதுவும் அவர்களுக்குக் கிடையாது. அல்லாஹ் அவர்களை ஒளியால் படைத்தான். தனது

ஆணைக்கு முழுமையாகக் கட்டுப்படும் தன்மையையும் அதனைச் செயல்படுத்தும் ஆற்றலையும் அவர்களுக்கு வழங்கியுள்ளான். அவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். எத்தனை பேர் என்பதை அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் அறிய முடியாது.

**ஆ. மலக்குமார்களை நம்புவதில் நான்கு விஷயங்கள் உள்ளன:**

1. அப்படி ஒரு படைப்பு உண்டு என நம்புவது.

2. அவர்களில் யாருடைய பெயரை நாம் அறிந்துள் ளோமோ அவர்களை அவர்களின் பெயரோடு நம்ப வேண்டும். உதாரணம்: ஜிப்ரீல்(அலை). பெயர் அறியாத மலக்குகளைப் பொதுவாக நம்ப வேண்டும்.

3. அவர்களின் தன்மைகளிலிருந்து நாம் அறிந்த வற்றை நம்புவது.

4. அல்லாஹ்வின் கட்டளைப்படி என்னென்ன செயல் களை அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என நாம் அறிந்துள்ளோமோ அவற்றை நம்புவது. உதாரணமாக மலக்குல் மௌத் எனும் உயிர்களைக் கைப்பற்றும் மலக்கு, மனிதர்கள் மரணிக்கும்போது உயிர்களைக் கைப்பற்றுகிறார்.

**3. வேதங்களை நம்புவது**

வேதங்கள் என்பதன் கருத்து படைப்பினங்கள் இம்மையிலும் மறுமையிலும் நற்பேற்றினை அடைவ தற்காக அவர்களுக்கு அருட்கொடையாகவும் நேர்வழி

காட்டியாகவும் தனது தூதர்கள் மீது அல்லாஹ் இறக்கி வைத்த வேதங்கள் என்பதாகும்.

**வேதங்களை நம்புவதில் உள்ளடங்கிய விஷயங்கள்:**

1. உண்மையாக அல்லாஹ்விடமிருந்தே அவை இறக்கியருளப்பட்டன என நம்புவது.

2. எந்தெந்த வேதங்களின் பெயரை நாம் அறிந்துள் ளோமோ அவற்றை அவற்றின் பெயரோடு நம்புவது.

உதாரணமாக முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு அல்குர்ஆன் இறக்கியருளப்பட்டது. நபி மூஸா (அலை) அவர்களுக்கு தவ்றாத் எனும் வேதம் இறக்கியருளப் பட்டது என்று நம்புவது.

3. அந்த வேதங்கள் வழங்கும் செய்திகளை உண்மை யென ஏற்றுக் கொள்வது. உதாரணமாக குர்ஆனுடைய செய்திகளையும் முந்தைய வேதங்களில் திரிக்கப் படாமல், மாற்றப்படாமல் உள்ள செய்திகளையும் ஏற்றுக் கொள்வதுபோல.

4. அவற்றில் உள்ள சட்டங்களில் மாற்றப்படாத சட்டங்களைக் கொண்டு செயல்படுவது, அவற்றைப் பொருந்திக் கொள்வது, ஏற்றுக் கொள்வது. அவற்றின் நுணக்கத்தை நாம் விளங்கினாலும் சரி, அல்லது விளங்காவிட்டாலும் சரியே. முன்னர் அருளப்பட்ட வேதங்கள் அனைத்தும் மகத்தான திருக்குர்ஆனால் மாற்றப்பட்டுவிட்டன. அல்லாஹ் கூறுகிறான்:

(நபியே!) நாம் இவ்வேதத்தை உம்மீது சத்தியத் துடன் இறக்கியுள்ளோம். இது முந்தைய வேதங்களை உண்மைப்படுத்தக்கூடியதாகவும் அவற்றை முடிவுகட்டக் கூடியதாகவும் இருக்கிறது. (5:48)

**வேதங்களை நம்புவதால் ஏற்படும் பயன்கள்**

அ. ஒவ்வொரு சமுதாயத்திற்கும் நேர்வழி காட்டும் வேதத்தை இறக்கியிருப்பதன் மூலம் அல்லாஹ் தன் அடியார்களைப் பரிவோடு கவனித்திருக்கிறான் என்பதை அறிய முடிகிறது.

ஆ. ஒவ்வொரு சமுதாயத்தவருக்கும் அவர்களின் நிலைமைகளுக்கு ஏற்ற சட்டங்களையே அல்லாஹ் வகுத்தளித்துள்ளான் எனும் வகையில் அவனது ஷரீஅத் திலுள்ள நுணுக்கத்தை அறிவது. அல்லாஹ் கூறுகிறான்:

உங்களில் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கைத் திட்டத் தையும் வழியையும் ஏற்படுத்தியுள்ளோம். (5:48)

இ. அல்லாஹ்வின் அருளுக்கு நன்றி செலுத்துதல்.

**4. தூதர்களை நம்புவது:**

மனிதர்களில் எவருக்கு வஹியின் மூலம் ஷரீஅத் கொடுக்கப்பட்டு அதை மக்களுக்கு எடுத்துரைக்கும்படி ஏவப்பட்டுள்ளதோ அவரே தூதராவார். இறைத்தூதர் களில் முதல் தூதர் நூஹ்(அலை) அவர்கள். இறுதித் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்.

இறைத்தூதரோ (ரஸூல்), நபியோ அனுப்பப்படாமல் எந்த சமுதாயமுமில்லை. அல்லாஹ் அந்த தூதருக்குத் தனிப்பட்ட ஷரீஅத் சட்டத்தைக் கொடுத்து அவரது சமுதாயத்திடம் அனுப்பி வைக்கிறான். அல்லது அந்த நபிக்கு வஹியின் மூலம் முந்தைய தூதரின் ஷரீஅத்தை கொடுத்து அவரது சமூகத்தாரிடம் அனுப்பிவைக்கிறான்- அந்த ஷரீஅத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்பதற்காக.

அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வையே வணங் குங்கள், தீய சக்திகளை விட்டு விலகிக்கொள்ளுங்கள் என்று (போதிக்குமாறு) ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு தூதரை அனுப்பி வைத்தோம். (16:36)

எந்த ஒரு சமுதாயமானாலும் எச்சரிக்கை செய்பவர் அவர்களுக்கு வராமல் இருந்ததில்லை. (35:24)

தூதர்கள் இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்கள் தாம். அவர்களுக்கு படைத்துப் பரிபாலிக்கும் சிறப்புத் தன்மைகளோ வழிபடுவதற்கான தகுதிகளோ எதுவும் கிடையாது. இன்னும் நோய், மரணம், பசி, தாகம் போன்ற மனித இயல்பைச் சேர்ந்த தன்மைகளும் அவர்களுக்கு உண்டு.

**தூதர்களை நம்புவதில் நான்கு விஷயங்கள் உள்ளன:**

1. அவர்களின் தூதுத்துவம் உண்மையானதே. அது அல்லாஹ்விடமிருந்து வந்தது. இறைத்தூதர்களில் ஒருவரது தூதுவத்தை நிராகரித்தவன் அனைத்து தூதர்

களையும் நிராகரித்தவனாவான். நூஹ் நபியை நிராகரித் தவர்களைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

நூஹுடைய சமுதாயத்தினர் இறைத்தூதர்களைப் பொய்ப்பித்தனர். (26:105)

2. அவர்களில் நாம் யாருடைய பெயரை அறிந்துள் ளோமோ அவரின் பெயருடன் அவரை நம்புவது.

உதாரணமாக முஹம்மத், நூஹ், இப்றாஹீம், மூஸா, ஈஸா (அலை) போன்றவர்களை நம்புவது போல. இந்த ஐந்து பேரும் உறுதிமிக்க தூதர்களாவர். இன்னும் அவர் களில் யாருடைய பெயரை நாம் அறியவில்லையோ அவர்களைப் பொதுவாக நம்பவேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: திண்ணமாக நாம் உமக்கு முன் பல தூதர்களை அனுப்பினோம். அவர்களில் சிலரைப் பற்றி உமக்குக் கூறியிருக்கிறோம். அவர்களில் சிலரைப் பற்றி உமக்கு நாம் கூறவில்லை. (40:78)

3. அவர்களின் செய்திகளில் ஆதாரப்பூர்வமாக வந்துள்ளவற்றை உண்மைப்படுத்த வேண்டும்.

4. அவர்களில் எந்தத் தூதர் இப்போது நம்மிடம் அனுப்பப்பட்டுள்ளாரோ அவருடைய மார்க்கத்தின்படி செயல்படுவது. அவர்தாம் இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள்.

**தூதர்களை நம்புவதால் ஏற்படும் பயன்கள்**

அ. அல்லாஹ் தன் அடியார்களுக்கு நேர்வழி காட்டு வதற்காகவும், அவர்கள் அல்லாஹ்வை எவ்வாறு வணங்க வேண்டும் என்பதை அவர்களுக்கு விளக்கு வதற்காகவும் இறைத்தூதர்களை அனுப்பி வைத்தான் எனும் வகையில் அவன் அடியார்கள் மீது பொழிந்த அருளையும் அவர்களின் பால் கொண்ட பரிவையும் நாம் அறிவது.

ஆ. அல்லாஹ்வின் இம்மாபெரும் அருட்கொடைக்காக அவனுக்கு நன்றி செலுத்துதல்.

இ. தூதர்களை நேசிப்பது, அவர்களைக் கண்ணியப்ப டுத்துவது. அவர்களின் தகுதிக்கு ஏற்ற முறையில் அவர் களைப் புகழ்வது. ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வின் தூதர்களாவர். அவனை தாமும் வணங்கி பிறருக்கும் அவனை வழிபடக் கற்றுத் தந்தவர்கள். அவனது தூதுத்துவத்தை மக்களுக்கு எடுத்துரைத்தவர்கள். அடியார்களுக்கு நற்போதனை புரிந்தவர்கள்!

**5. இறுதி நாளை நம்புவது**

இறுதி நாள்- மனிதர்கள் அனைவரையும் அல்லாஹ் உயிர்ப்பித்து எழுப்பும் மறுமை நாளாகும். இந்நாளில் கேள்வி, கணக்குக் கேட்டு அனைவருக்கும் நற்கூலி அல்லது தண்டனை வழங்கப்படும். இதன் பிறகு வேறொரு நாள் இல்லை என்பதால் இதற்கு இறுதி நாள் என்று சொல்லப்பட்டது.

**இறுதி நாளை நம்புவதில் உள்ளடங்கிய விஷயங்கள்:**

1. மனிதர்கள் அனைவரும் மீண்டும் உயிர் கொடுக் கப்பட்டு எழுப்பப்படுவதை நம்புவது: இவ்வாறு எழுப்பப் படுவது குர்ஆனும் நபிமொழியும் அறிவித்துவிட்ட உறுதியான உண்மையாகும். முஸ்லிம்கள் ஏகோபித்துக் கூறக்கூடிய விஷயம் இது.

2. விசாரணையையும் கூலி கொடுக்கப்படுவதையும் நம்புவது. தனது செயல் குறித்து மனிதன் விசாரிக்கப்படு வான். அதன்பேரில் நற்கூலியோ தண்டனையோ வழங்கப் படுவான். குர்ஆனும் ஹதீஸும் இதனை அறிவிக்கின்றன. ஏகோபித்த முஸ்லிம்களின் கொள்கையும் இதுதான்.

3. சொர்க்கம், நரகத்தை நம்புவது. இவ்விரண்டும் படைப்பினங்கள் சென்றடைய வேண்டிய நிரந்தரமான இடங்களாகும். மரணத்திற்குப் பின்னுள்ள அனைத்தை யும் நம்புவது இறுதி நாளை நம்புவதில் அடங்கும். கப்ருடைய சோதனை, அதன் துன்பம், இன்பம் ஆகியவற் றைப் போல.

**இறுதி நாளை நம்புவதால் ஏற்படும் பயன்கள்**

அ. அந்நாளில் இறைவன் தண்டிப்பதைப் பயந்து பாவம் செய்ய அஞ்சுதல், அது குறித்து அதிருப்தியடைதல்

ஆ. அந்நாளின் நற்கூலியைப் பெறுவதற்காக வணக்க வழிபாடுகளைச் செய்வதில் ஆர்வமும் ஆவலும் கொள்வது.

இ. உலகத்தின் வசதிவாய்ப்புகள் தனக்குக் கிடைக் காமல் போவது குறித்து ஒரு மு.்.மின் பொறுமை கொள்வது, ஆறுதல் அடைவது- தனக்கு மறுமையில் கிடைக்கும் அருட்பேறுகளையும் நன்மைகளையும் எதிர்பார்த்து.

**6. விதியை நம்புவது**

விதி: அல்லாஹ் எல்லாவற்றையும் முன்னரே அறிந் திருப்பதற்கு ஏற்பவும் அவனுடைய விவேகத்தின் தேட்டப் படியும் படைப்பினங்களுக்கு அவன் நிர்ணயித்திருக்கும் ஏற்பாடு.

**விதியை நம்புவதில் நான்கு விஷயங்கள் உள்ளன:**

1. அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் பொது வாகவும் விரிவாகவும் ஆதிமுதல் அந்தம் வரையிலும் அறிந்திருக்கிறான் என அறிவது. அது அவனுடைய செயல்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களாயினும் அவனது அடியார்களின் செயல்கள் சம்பந்தப்பட்ட விஷயங் களாயினும் சரியே.

2. இந்த விவரங்களை அல்லாஹ் லவ்ஹுல் மஹ்.்.பூல் எனும் பாதுகாக்கப்பட்ட ஏட்டில் எழுதி வைத்துள்ளான் என நம்புவது.

3. நிகழுபவை அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப் படியே தவிர நிகழுவதில்லை என நம்புவது. அவை அல்லாஹ்வுடைய செயல் சம்பந்தப்பட்டவையானாலும்

சரியே. படைப்பினங்களின் செயல் சம்பந்தப்பட்டவையானாலும் சரியே.

தான் நாடியதை உமது இறைவன் படைப்பான்; தேர்வு செய்வான். (அல்குர்ஆன் 28:68)

4. எல்லாப் படைப்பினங்களும்- அவற்றின் உள்ளமை, தன்மைகள், அசைவுகள் உட்பட அனைத்துமே அல்லாஹ்வினால் படைக்கப்பட்டவையாகும் என நம்புவது. அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ் தான் அனைத்துப் பொருள்களையும் படைப்பவன், இன்னும் அவனே எல்லாப் பொருள்களின் பாதுகாவலனுமாவான். (39:62)

**விதியை நம்புவதால் ஏற்படும் மகத்தான பயன்கள்**

அ. காரண காரியங்களைச் செய்யும்போது அந்தக் காரணியின் மீதே சார்பு கொள்ளாமல்- அல்லாஹ்வின் மீதே முழுவதுஞ் சார்பு கொள்வது. ஏனெனில் அல்லாஹ் விதித்த விதிப்படியே ஒவ்வொன்றும் நடக்கின்றது.

ஆ. தான் நாடிய காரியம் நிறைவேறிடும்போது மனிதன் தற்பெருமை கொள்ளாதிருப்பது. ஏனெனில் அது நிறைவேறியது அல்லாஹ்வின் அருளினாலாகும். அவன் தான் நன்மை மற்றும் வெற்றிக்கான காரணிகளை நிர்ணயித்து வைத்தான். அது குறித்து மனிதன் தற்பெருமை கொள்வது இந்த அருட்கொடைக்கு நன்றி செலுத்துவதை விட்டும் அவனை மறக்கடித்துவிடும்.

இ. அல்லாஹ் நிர்ணயித்த விதிப்படி காரியங்கள் நடைபெறுகிறபோது அது குறித்து மனிதன் மனநிம்மதியும் சாந்தியும் அடைவது. வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியதிகாரம் யாருடைய கைவசம் உள்ளதோ அந்த அல்லாஹ்வின் நிர்ணயப்படி சந்தேகமில்லாமல் அது நடந்தே தீரும். அல்லாஹ் கூறுகிறான்:

இந்தப் பூமியிலோ, உங்களிடமோ எந்தத் துன்பம் நிகழ்ந்தாலும் அதனை நாம் உருவாக்குவதற்கு முன்பே பதிவேட்டில் இல்லாமல் இருக்காது. இது அல்லாஹ்வுக்கு எளிதானது. உங்களுக்குத் தவறிவிட்டதற்காக நீங்கள் கவலைப்படாமல் இருப்பதற்காகவும், அவன் உங்களுக்கு வழங்கியதில் நீங்கள் பூரித்துப் போகாமல் இருப்பதற் காகவும் (விதியை ஏற்படுத்தியுள்ளான்). கர்வமும் பெறுமையும் கொண்ட ஒவ்வொருவரையும் அல்லாஹ் நேசிக்க மாட்டான். (57:22-23)

**விதி விஷயத்தில் இரு கூட்டத்தினர் வழி தவறி விட்டனர்.**

1. ஜப்ரிய்யா கூட்டத்தினர்: ஒரு மனிதன் தனது செயலில் நிர்ப்பந்திக்கப்படுகிறான். அதில் அவனுக்கு சுயவிருப்பமோ சுயசக்தியோ இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

2. கத்ரிய்யா கூட்டத்தினர்: ஒரு அடியான் ஒரு செயலைச் செய்யும்போது அவன் சுயவிருப்பத்துடனும் சுயசக்தியுடனும் செய்கிறான். அதில் அல்லாஹ்வின்

நாட்டமோ சக்தியோ சம்பந்தப்படவில்லை என்று கூறுகின்றனர். இன்னும் "அல்லாஹ் ஒவ்வொரு பொரு ளையும் நிர்ணயித்து அது நிகழ்வதற்கு முன்னால் அதை அறிந்தும் வைத்திருக்கின்றான்" என்பதை இவர்கள் நிராகரிக்கவும் செய்கின்றனர். இவ்விருகூட்டத்தினரின் கூற்று மிகப் பெரும் தவறாகும்.

## பாடம் - 4

**தவ்ஹீதின் வகைகள்:**

**தவ்ஹீதின் வகைகள் மூன்றாகும்: அவை, தவ்ஹீதுர் ருபூபிய்யா, தவ்ஹீதுல் உலூஹிய்யா, தவ்ஹீதுல் அஸ்மா வஸி∴பாத் ஆகியவையாகும்.**

---

வணக்க வழிபாடுகளை அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே செய்வதற்கு தவ்ஹீத் எனப்படும். அதற்கு மூன்று வகைகள் உள்ளன.

### 1. தவ்ஹீதுர் ருபூபிய்யா

படைத்துப் பரிபாலித்து, உணவளித்து, நிர்வகிப்பவன் அல்லாஹ் மட்டுமே என நம்புவதற்கு தவ்ஹீதுர் ருபூபிய்யா என்று சொல்லப்படும். இவ்வகைத் தவ்ஹீதை முஷ்ரிக்குகள் ஏற்றிருந்தனர். எனினும் அது அவர்களை இஸ்லாத்தில் சேர்க்கவில்லை. இதற்கு ஆதாரம்:

அவர்களைப் படைத்தவன் யார் என்று அவர்களிடமே நீர் கேட்டால் அல்லாஹ் என்று அவர்கள் கூறுவார்கள். (43:87)

**2. தவ்ஹீதுல் அஸ்மா வஸ்ஸி:பாத்**

அல்லாஹ் தனது வேதத்தில் தன்னை எவ்வாறு வர்ணித்துள்ளானோ அல்லது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை எவ்வாறு வர்ணித்துள்ளார்களோ அதனை அவனது கண்ணியத்திற்கும் மகத்துவத்திற்கும் ஏற்ற முறையில் நம்புவதாகும். இவ்வகைத் தவ்ஹீதை சில இணைவைப்பாளர்கள் ஏற்றிருந்தனர். சிலர் அறியாமை யாலும் பிடிவாதத்தாலும் மறுத்தனர்.

**3. தவ்ஹீதுல் உலூஹிய்யா**

வணக்க வழிபாடுகள் அனைத்தையும் அல்லாஹ் வுக்கே உரித்தாக்குவதாகும். நேசித்தல், அஞ்சுதல், ஆதரவு வைத்தல், தவக்குல் வைத்தல், பிரார்த்தனை செய்தல் போன்றவை வணக்கத்தின் வகைகளில்லுள்ள வையாகும். இவ்வகைத் தவ்ஹீதை இணைவைப்பவர்கள் நிராகரித்தனர்.

**ஷிர்க்கின் வகைகள்:** பெரிய ஷிர்க், சிறிய ஷிர்க், மறைமுக ஷிர்க் என ஷிர்க் மூன்று வகைப்படும்.

**பெரிய ஷிர்க்:**

இத்தகைய ஷிர்க் நல்லறங்களைப் பாழாக்கி நிரந்தர நரகத்தில் அவசியம் தள்ளிவிடும். “அவர்கள் இணை

கற்பித்திருந்தால் அவர்கள் செய்த (நல்ல) வை அவர் களை விட்டும் அழிந்திருக்கும். (அல்குர்ஆன் 6:88) இணை கற்பிப்போர் தமது (இறை) நிராகரிப்புக்கு தாமே சாட்சி கூறிக்கொண்டிருக்கும் நிலையில் அல்லாஹ்வின் பள்ளிவாசல்களை நிர்வகிப்பது தகாது. அவர்கள் செய்தவை அழிந்துவிட்டன. அவர்கள் நரகில் நிரந் தரமாக இருப்பார்கள். (அல்குர்ஆன் 9:17)

மேலும் இணை கற்பித்த நிலையில் எவன் மரணித்து விடுகிறானோ அவனுக்கு மன்னிப்பு வழங்கப்படமாட்டாது, சொர்க்கம் அவனுக்குத் தடை செய்யப்பட்டுவிடும்.

தனக்கு இணை கற்பிக்கப்படுவதை அல்லாஹ் மன்னிக்க மாட்டான். அதற்குக் கீழ் நிலையில் உள்ள (பாவத்) தை தான் நாடியோருக்கு மன்னிப்பான். (4:48)

அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்போருக்கு சொர்க் கத்தை அல்லாஹ் விலக்கப்பட்டதாக ஆக்கிவிட்டான். அவர்கள் சென்றடையும் இடம் நரகம். அநீதி இழைத் தோருக்கு எந்த உதவியாளர்களும் இல்லை. (5:72)

இறந்தவர்களிடம், சிலைகளிடம் பிரார்த்திப்பது, அவர் களிடம் உதவி (இரட்சிப்பு) தேடுவது, அவர்களுக்கு நேர்ச்சை செய்வது, அவர்களுக்கு அறுத்துப் பலியிடுவது போன்ற அனைத்தும் பெரிய ஷிர்க்கின் வகைகளாகும்.

**சிறிய ஷிர்க்**

இத்தகைய ஷிர்க் குர்ஆன் மற்றும் நபிவழிச் சான்றுகள் மூலம் ஷிர்க் என நிருபணமாகி இருக்கும்.

ஆனால் இது பெரிய ஷிர்க்கின் வகையைச் சேர்ந்த தல்ல. உதாரணமாக முகஸ்துதி, அல்லாஹ் அல்லாத வற்றைக் கொண்டு சத்தியம் செய்வது, அல்லாஹ்வும் இன்னாரும் நாடியது நடந்தது எனச் சொல்வது. இன்னும் இது போன்றது.

"நான் உங்கள் விஷயத்தில் அதிகம் அஞ்சுவது சிறிய ஷிர்க்காகும்" என நபி(ஸல்) கூறியதும் "அல்லாஹ்வின் தூதரே! சிரிய ஷிர்க் என்றால் என்ன?" என்று தோழர்கள் கேட்டனர். அதற்கு "முகஸ்துதி" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: மஹ்மூத் இப்னு லுபைத்(ரலி) நூல்: அஹ்மத்(22523), தப்ரானி கபீர் (4/253)

"அல்லாஹ்வை விடுத்து வேறு எதன் மீதும் சத்தியம் செய்தவன் இணைவைத்து விட்டான்" என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: உமர்(ரலி), அஹ்மத் (311)

"அல்லாஹ் அல்லாதவர் மீது சத்தியம் செய்தவன் இணை கற்பித்து விட்டான்" என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), நூல்: அபூதாவூத்(3251), திர்மிதி(1647) ஹாக்கிமுடைய அறிவிப்பில் "கா.ஃ.பிராகி விட்டான்" என வந்துள்ளது. (ஹாக்கிம்: 1/65, 117)

"அல்லாஹ் நாடியதும் இன்னார் நாடியதும் நடந்தது" எனக் கூறாதீர்கள். எனினும் "அல்லாஹ் நாடியது நடந்தது. பின்னர் இன்னார் நாடினார்" எனக் கூறுங்கள்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஹுதைஃபா(ரலி), அபூதாவூத்(4980)

இந்த வகை ஷிர்க் இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றி விடாது. நிரந்தர நரகத்தையும் அவசியமாக்கிவிடாது. எனினும் தவ்ஹீதின் பூரணத்துவத்திற்கு இது முரணான தாகும்.

**மறைமுக ஷிர்க்**

இதற்கு ஆதாரம்: "நான் உங்கள் விஷயத்தில் தஜ்ஜாலை விட அதிகம் அஞ்சுகிற ஒன்றை உங்களுக்கு அறிவிக்கட்டுமா?" என நபி(ஸல்)அவர்கள் கேட்டதும், "அறிவியுங்கள் அல்லாஹ்வின் தூதரே!" என்று தோழர்கள் கூறினர். "அது தான் மறைமுகமான ஷிர்க். அதாவது ஒருவன் தொழுகைக்குத் தயாராகி தொழு கையை நிறைவேற்றும்போது இன்னொருவன் தன்னைப் பார்க்கிறான் என்பதற்காக தனது தொழுகையை அவன் அழகுறத் தொழுவது" என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஸயீத்(ரலி), இப்னுமாஜா(4204)

பெரிய ஷிர்க், சிறிய ஷிர்க் என இரண்டு வகையாக மட்டும் ஷிர்க்கைப் பிரிக்கலாம். மறைமுகமான ஷிர்க் இவ்விரண்டையும் உள்ளடக்கிவிடுகிறது. சில சமயம் மறைமுக ஷிர்க் பெரிய ஷிர்க்கில் உள்ளடங்கிவிடும். உதராணமாக நயவஞ்கர்களின் ஷிர்க்கைப் போன்று. ஏனெனில் அவர்கள் உள்ளுக்குள் தம் அசத்தியக் கொள்கையை மறைத்து வைத்துக்கொண்டு, முகஸ் துதிக்காகவும், தங்களுக்கு ஏதும் நிகழந்துவிடக் கூடாது

என்ற அச்சத்தினாலும் இஸ்லாத்தை வெளிக்காட்டிக் கொள்வார்கள்.

மறைமுக ஷிர்க் சில சமயம் சிறிய ஷிர்க்கிலும் அடங்கும். உதாரணம் முகஸ்துதி. மேற்கூறப்பட்ட மஹ்மூத் இப்னு லுபைத்(ரலி), அபூஸயீத்(ரலி) ஆகிய இருவர் அறிவிக்கும் ஹதீஸ்கள் இதற்கு சான்றாகும்.

## பாடம் - 5

**இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள்:**

**இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள் ஐந்து. அவை: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சி சொல்வது, தொழுகையை நிலைநாட்டுவது, ஸகாத் கொடுப்பது, ரமழானில் நோன்பு நோற்பது, சக்தியுள்ளவர்கள் ஹஜ் செய்வது ஆகியனவாகும்.**

-------------------------------------------------

மூலாசிரியர் தவ்ஹீத் மற்றும் ஷிர்க்கின் வகைகளைக் கூறி முடித்ததும் இஸ்லாத்தின் ஐம்பெரும் அடிப்படைக் கடமைகளைக் கூறத் துவங்கிவிடுகிறார். இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள் ஐந்து என்றே ஸஹீஹான ஹதீஸிலும் வந்துள்ளது.

“இஸ்லாம் ஐந்து அடிப்படைக் கடமைகள் மீது நிறுவப் பட்டுள்ளது. அவை, வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்

வைத் தவிர வேறு யாரும் இல்லை என்றும் முஹம்மத் நபி அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்றும் உறுதியாக நம்புவது, தொழுகையை நிலை நாட்டுவது, ஸகாத் கொடுப்பது, ஹஜ் செய்வது ரமழானில் நோன்பு நோற்பது ஆகியனவாகும்” என நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். (புகாரி-8 முஸ்லிம்-16)

இந்த நபிமொழியில் ஐந்து அடிப்படைக் கடமைகள் என்று நாம் மொழிபெயர்த்த இடத்தில், மூலத்தில் ஐந்து என்று மட்டுமே உள்ளது. ஐந்து என்பதை ஐம்பெரும் கடமைகள் அல்லது ஐம்பெரும் தூண்கள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

அப்படியானால் இங்கு இஸ்லாம் ஐம்பெரும் தூண்கள் மீது நிலைபெற்றுள்ள ஒரு கட்டிடத்திற்கு ஒப்பாக்கப் பட்டுள்ளது. தூண்களின்றி கட்டிடம் இல்லைதானே! இந்த ஐம்பெரும் கடமைகள் தவிர இஸ்லாத்திலுள்ள ஏனைய காரியங்கள் இக்கட்டிடத்தைப் நிறைவு செய்வது போன்றாகும்.

“வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சி சொல்வது” என்றால் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்புவதாகும். முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில் “இஸ்லாம் ஐந்து அடிப்படைக் கடமைகள் மீது அமைக்கப்பட்டுள்ளது. அவை, அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவது...” எனவும்

இன்னொரு அறிவிப்பில், “அல்லாஹ்வை வணங்கி அவன் அல்லாத தெய்வங்ளை நிராகரிப்பது...” எனவும் உள்ளது. (பார்க்க: முஸ்லிம்-16)

தொழுகையை நிலைநாட்டுதல்: “ஒருவன் இறை நிராகரிப்பிலும் இணைவைப்பிலும் இருக்கிறான் என்பதன் அடையாளம் தொழுகையை விடுவதாகும்” என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), (முஸ்லிம்-82)

“காரியங்களில் தலையாயது இஸ்லாம். அதன் தூண் தொழுகை..” எனவும் நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: முஆத்(ரலி) நூல்: திர்மிதி(2616)

“ஸஹாபாக்கள் மார்க்கக் காரியங்களில் தொழுகை யைத் தவிர வேறெதை விடுவதையும் கு∴ப்ர் (இறை மறுப்பு) எனக் கருதவில்லை” என அப்துல்லாஹ் பின் ஷகீக் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளனர்.

ஸகாத் கொடுத்தல்: இது இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளில் மூன்றாவது கடமையாகும்.

நீங்கள் தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸகாத் கொடுங்கள். (அல்குர்ஆன் 2:43)

வணக்கத்தை அல்லாஹ்வுக்கே தூய்மையாக்கிய வர்களாக, (தவறான வழியிலிருந்து விலகி சரியான வழியில்) பிடிப்புள்ளவர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும், மேலும் தொழுகையை நிலைநாட்ட வேண்டும், ஸகாத்தை வழங்க வேண்டும் என்பதைத்

தவிர (வேறெதுவும்) அவர்களுக்குக் கட்டளையிடப்பட வில்லை. இது தான் நேரான மார்க்கமாகும். (98:5)

ரமழானில் நோன்பு நோற்றல்: இது இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளில் நான்காவது கடமையாகும்.

நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் இறைவனை அஞ்சுவதற்காக உங்களுக்கு முன் சென்றோர் மீது கடமையாக்கப்பட்டதுபோல உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. (அல்குர்ஆன் 2:183)

ஹஜ் செய்தல்: இது இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளில் ஐந்தாவது கடமையாகும்.

அந்த ஆலயத்தில் அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்வது அங்கு சென்று வர சக்தி பெற்ற மனிதர்களுக்குக் கடமை யாகும். யாரேனும் மறுத்தால் நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட்டும் தேவையற்றவன்! (3:97)

இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளை எடுத்துச் சொல்லக்கூடிய மேற்கூறப்பட்ட இந்த நபிமொழி இஸ்லாமிய மார்க்கத்தை அறிந்து கொள்வதற்கு பெரும் அடிப்படை ஆதாரமாக அமைந்துள்ளது.

## பாடம் - 6

### தொழுகையின் நிபந்தனைகள்:

**தொழுகையின் நிபந்தனைகள் ஒன்பது. முஸ்லிமாக இருப்பது, புத்தி சீர்நிலையில் இருப்பது, பருவ வயதை**

**அடைந்திருப்பது, துடக்கை நீக்குவது, அசுத்தத்தை அகற்றுவது, மறைக்க வேண்டிய உறுப்புகளை மறைப்பது, தொழுகைக்குரிய நேரம் வருவது, கிப்லாவை முன்னோக்குவது, நிய்யத் ஆகியனவாகும்.**

---

மூலாசிரியர் ஐந்தாவது பாடத்தில் இஸ்லாத்தின் ஐந்து அடிப்படைக் கடமைகளைக் கூறிய பின்னர் இந்தப் பாடத்தில் தொழுகையின் நிபந்தனைகளைக் கூறி யிருப்பது பொருத்தமானதாகும். ஏனெனில் இஸ்லாமியக் கடமைகளில் ஏகத்துவம் மற்றும் தூதுத்துவ சாட்சியத் திற்குப் பிறகு தொழுகை மிக முக்கியமானதாகும். சில நிபந்தனைகளைப் பேணாமல் தொழுகை நிறை வேறாது. எனவே அவற்றை இங்கு கூறுவது பொருத்த மாகும்.

முதலில் முதல் மூன்று நிபந்தனைகளை எடுத்துக் கொள்வோம். 1. முஸ்லிமாக இருத்தல், 2. புத்தி சீர் நிலையில் இருத்தல், 3. பருவ வயதை அடைந்திருத்தல். முஸ்லிம் அல்லாதவரின் தொழுகை நிறைவேறாது. ஏனெனில் அவன் செய்யும் நற்செயல்கள் இறைவனிடம் வீணாகிவிடும் என்பதால். பைத்தியக்காரன் மீது ஷரீஅத் சட்டங்கள் கடமையாகாததால் அவனது தொழுகையும் நிறைவேறாது. “உங்கள் குழந்தைகள் ஏழு வயதை அடையும் போது அவர்களைத் தொழும்படி ஏவுங்கள்”

(அஹ்மத்-6467) என்ற ஹதீஸின் கருத்துப்படி குழந்தை களின் தொழுகையும் நிறைவேறாது.

4. உளூ செய்வது: அதாவது சக்தியிருக்கும்போது உளூ செய்து கொள்வது. “உளூவின்றி எந்தத் தொழு கையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது” என்பது நபி மொழி. (முஸ்லிம்-224, திர்மிதி-1)

5. தொழுகைக்குரிய நேரம் வருதல்: “(நபியே!) சூரியன் (உச்சியிலிருந்து) சாய்ந்ததும் தொழுகையை நிலைநாட்டுவீராக!” (அல்குர்ஆன் 17:78) “தொழுகைக்கு என நேரம் உள்ளது. அதனை அல்லாஹ் நிபந்தனை யாக்கியுள்ளான். அந்த நேரத்திலே தவிர தொழுகை நிறைவேறாது” என உமர்(ரலி)அவர்கள் கூறினார்கள்.

ஜிப்ரீல்(அலை) ஐவேளை தொழுகைகளை நபி(ஸல்) அவர்களுக்குத் தொழுது காட்டினார்கள். முதல் நாள் வந்து முதல் நேரத்திலும் இரண்டாம் நாள் வந்து கடைசி நேரத்திலும் தொழுது காட்டிவிட்டு பின்னர் “இவ்விரண் டிற்கும் இடைப்பட்ட நேரம்தான் தொழுகை நேரம்’ எனக் கூறினார்கள். (பார்க்க: நஸயீ-523, அஹ்மத்-14011)

6. மறைக்க வேண்டிய பகுதியை மறைப்பது: சக்தி இருக்கும்போது மறைத்துக் கொள்ள வேண்டும். தோல் தெரியாத அளவுக்கு மறைத்தல் வேண்டும். (ஆண்கள் மறைக்க வேண்டிய பகுதி தொப்புளிலிருந்து முட்டுக்கால் வரையாகும். பெண்களுக்கு உடல் முழுவதும் மறைக்க

வேண்டிய பகுதியாகும். ஆனால் தொழும் போது பெண்கள் முகத்தை மறைக்கக் கூடாது.)

ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு தொழுமிடத்திலும் உங்கள் அலங்காரத்தைச் செய்து கொள்ளுங்கள்.(7:31) "மேலாடை இல்லாமல் பருவமடைந்த பெண்ணின் தொழுகையை அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான்" என்பது நபிமொழி. (அபூதாவூத்-641, திர்மிதி-377)

அல்லாஹ்வின் தூதரே! நான் வேட்டையாடிக் கொண் டிருக்கும்போது ஒரு ஆடையில் தொழுகிறேன். (இது கூடுமா?) எனக் கேட்டேன். அதற்கு நபி(ஸல்)அவர்கள், "ஆம்! முள்ளை வைத்தேனும் அதை வேட்டியாக தைத்துக் கொள்" எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: ஸல்மா பின் அக்வ.்.(ரலி), நூல்: அபூதாவூத்(632), நஸயீ(757), அஹ்மத்(15925)

தொழுகையில் மறைக்க வேண்டிய பகுதியை மறைப் பதற்கு சக்தி இருந்தும் நிர்வாணமாக தொழுபவனின் தொழுகை வீணாகிவிடுமென்பது அறிஞர்களின் ஏகோ பித்த முடிவாகும் என இப்னு அப்துல் பர்(ரஹ்) கூறி யுள்ளார்கள்.

7. உடல், உடை, இடம் ஆகியவற்றை அசுத்தத்தை விட்டும் நீக்குவது: (அதாவது இவையனைத்தும் சுத்தமாக இருக்க வேண்டும்.)

(நபியே!) உமது ஆடைகளைத் தூய்மைப்படுத்து வீராக! (அல்குர்ஆன் 74:4) ஆடையில் பட்ட மாத

விடாய் இரத்தம் பற்றி அஸ்மா(ரலி) யிடம் நபி(ஸல்) கூறும்போது, “அதைச் சுரண்டிவிட்டு, தண்ணீரால் கழுவி, பிறகு அதிலேயே தொழுதுகொள்” எனக் கூறினார்கள். (புகாரி-227, முஸ்லிம்-291)

8. கிப்லாவை முன்னோக்குதல்: எனவே உமது முகத்தை மஸ்ஜிதுல் ஹராமின் திசையில் திருப்புவீராக! (அல்குர்ஆன் 2:144)

9. நிய்யத் (எண்ணம்): “செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி-1, முஸ்லிம்-1907) இத்துடன் தொழுகையின் நிபந்தனைகள் நிறைவுற்றன. அல்லாஹ் மிக அறிந்தவன்!

## பாடம் - 7

**தொழுகையின் ருகுன்கள்:**

**தொழுகையின் ருகுன்கள்- முதல் நிலைக் கடமைகள் பதினான்கு. அவையாவன: சக்தியிருக்கும்போது நின்று தொழுவது, தக்பீருத் தஹ்ரீம் எனும் முதல் தக்பீர் கூறுவது, ஒவ்வொரு ரக்அத்திலும் சூரத்துல் பாத்திஹா ஓதுவது, ருகூவு செய்வது, ருகூவிலிருந்து எழுந்து நிலையில் நிற்பது, ஏழு உறுப்புகள் தரையில் படுமாறு ஸஜ்தா செய்வது, ஸஜ்தாவிலிருந்து எழுவது, இரு ஸஜ்தாக்களுக்கிடையே அமர்வது, எல்லா நிலைகளிலும் அமைதியை மேற்கொள்வது, கடைசி**

**அத்தஹிய்யாத் துக்காக அமர்வது, அதில் அத்தஹிய்யாத் ஓதுவது, நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வது, இரண்டு ஸலாம் கொடுப்பது, இக்கடமைகள் அனைத் தையும் வரிசையாகச் செய்வது.**

---------------------------------------------------

முந்தைய பாடத்தில் மூலாசிரியர் தொழுகையின் நிபந்தனைகள் பற்றிக் கூறிய பின் இங்கு தொழுகையின் முதல் நிலைக் கடமைகளைக் கூறுவது பொருத்தமாக உள்ளது. ஏனெனில் தொழுகையின் நிபந்தனைகள் தொழுகைக்கு முன் நிறைவேற்றப்பட வேண்டியவை யாகும். தொழுகையின் முதல் நிலைக் கடமைகளோ தொழுகையுடன் நிறைவேற்றப்பட வேண்டியவையாகும்.

1. சக்தியிருக்கும்போது நின்று தொழுவது: அல்லாஹ் வுக்குக் கட்டுப்பட்டு நில்லுங்கள். (அல்குர்ஆன் 2:238) இம்ரான் பின் ஹுஸைன்(ரலி) அறிவிக்கும் ஹதீஸில் "நீ நின்று தொழு" என்று நபி(ஸல்)அவர்கள் கூறியுள்ளனர். (புகாரி-1117) அனைத்து அறிஞர்களும் இதில் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கின்றனர்.

2. தக்பீரதுல் இஹ்ராம் எனும் முதல் தக்பீர்: "தொழுகையின் திறவுகோல் உளூவாகும்.(தொழுகைக்கு வெளியேயுள்ள ஆகுமான காரியங்களை) ஹராமாக்கக் கூடியது முதல் தக்பீர் ஆகும். (அவற்றை) ஹலாலாக்கக்

கூடியது ஸலாம் கூறுவதாகும்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (திர்மிதி-3, அபூதாவூத்-61, இப்னுமாஜா-275)

தவறாகத் தொழுத ஒருவரிடம் நபி(ஸல்) அவர்கள் “நீ தொழுகைக்குத் தயாரானால் முழுமையாக உளூச் செய். பின்பு கிப்லாவை முன்னோக்கி அல்லாஹு அக்பர் எனக் கூறு” என்றார்கள். (புகாரி-6251,முஸ்லிம்-397)

3. ஒவ்வொரு ரக்அத்திலும் சூரத்துல் ∴பாத்திஹா ஓதுவது: “சூரத்துல் ∴பாத்திஹா ஓதாதவனுக்குத் தொழுகை இல்லை” என நபி(ஸல்)அவர்கள் கூறியதாக உபாதாபின் ஸாமித்(ரலி) அறிவிக்கிறார்கள். (புகாரி-756, முஸ்லிம்-394)

4. ருகூவுச் செய்தல்: நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் ருகூவு செய்யுங்கள். (அல்குர்ஆன் 22:77) தவறாகத் தொழுத ஒருவரிடம் நபி (ஸல்) அவர்கள் “...பின்னர் அமைதியாக ருகூவு செய்வீராக!” எனக் கூறினார்கள். (புகாரி-757, முஸ்லிம்-397)

5. ருகூவிலிருந்து எழுந்து நிலையில் நிற்பது: தவறாகத் தொழுத மனிதரிடம் நபி (ஸல்) அவர்கள் “...பின்னர் ருகூவிலிருந்து எழுந்து சரியான நிலைக்கு வருவீராக!” எனக் கூறினார்கள். (புகாரி-757, முஸ்லிம்-397) “ருகூவிலும் ஸுஜூதிலும் தன் முதுகை நேராக வைக்காதவனுக்கு தொழுகை நிறைவேறாது” என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூமஸ்வூத் (ரலி) அறிவிக்

கிறார்கள். நூல்: அபூதாவூத்(855), திர்மிதி(265), நஸயீ (1017), இப்னுமாஜா(870)

6. ஏழு உறுப்புக்களின் மீது ஸஜ்தா செய்தல்: “நெற்றி, இரு கைகள், இரண்டு முட்டுக்கால்கள், இரண்டு பாதங் களின் முனைகள் ஆகிய ஏழு உறுப்புக்கள் (தரையில்) படுமாறு ஸஜ்தாச் செய்யும்படி நான் கட்டளையிடப் பட்டுள்ளேன்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நெற்றியைக் குறிப்பிடும்போது தமது கையால் மூக்கை அடையாளம் காட்டினார்கள்.) (புகாரி-812,முஸ்லிம்-490)

7, 8. ஸஜ்தாவிலிருந்து எழுதலும் இரு ஸஜ்தாக் களுக்கிடையில் அமர்தலும்: தவறாகத் தொழுதவரிடம் நபி(ஸல்)அவர்கள் “...பின்னர் ஸஜ்தாவிலிருந்து எழுந்து அமைதியாக உட்காருவீராக!” எனக் கூறினார்கள். (புகாரி-757, முஸ்லிம்-397) ஆயிஷா(ரலி) அறிவிப்பதாவது: “நபி(ஸல்) அவர்கள் ஸஜ்தாவிலிருந்து தமது தலையை உயர்த்தினால் நேராக உட்காராத வரை இரண்டாம் ஸஜ்தா செய்ய மாட்டார்கள்.” (முஸ்லிம்-498)

9. எல்லா நிலைகளிலும் அமைதியை மேற்கொள்ளல்: தவறாகத் தொழுதவரிடம் நபி (ஸல்) அவர்கள் “நீ தொழுகைக்காக நின்றதும் தக்பீர் கூறுவீராக! பின்னர் குர்ஆனில் உனக்குத் தெரிந்தவற்றை ஓதுவீராக! பின்னர் அமைதியாக ருகூவு செய்வீராக! பின்னர் ருகூவிலிருந்து எழுந்து சரியான நிலைக்கு வருவீராக! பின்னர்

அமைதியாக ஸஜ்தா செய்வீராக! பின்னர் ஸஜ்தாவி லிருந்து எழுந்து அமைதியாக உட்காருவீராக! இவ்வாறே உமது எல்லாத் தொழுகையிலும் செய்து வருவீராக!” என்று கூறினார்கள். (புகாரி-757, முஸ்லிம்-397) நபி (ஸல்) அவர்கள் தமது தொழுகையில் அமைதியை மேற் கொள்வார்கள். மேலும் அவர்கள் கூறினார்கள்: “என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே நீங்களும் தொழுங்கள்.” (புகாரி-631)

10, 11. கடைசி அத்தஹிய்யாத்துக்காக அமர்வதும் அதில் அத்தஹிய்யாத்து ஓதுவதும்: உங்களில் ஒருவர் தொழுகையில் அமர்ந்து விட்டால்,

اَلتَّحِيَّا تُ للهِ وَ الصَّلَواتُ وَ الطَّيِّبا تُ السَّلاَمُ عَلَيْكَ أَيُّهَا النَّبِىُّ وَرَحْمَةُ الله

وَبَرَكاتُهُ السَّلاَمُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ الله الصَّا لِحِيْنَ أَشْهَدُ أَنْ لآ اِلهَ إلاّ الله

وَأَشْهَدُ أَنَّ مُحَمَّداً عَبْدُهُ وَرَسُولُهُ

அத்தஹிய்யாத்து லில்லாஹி, வஸ்ஸலவாத்து, வத்தய் யிபாத்து, அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன். அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹு எனக் கூறட்டும் என நபி(ஸல்) கூறினார்கள். (புகாரி-6230, முஸ்லிம்-402)

12. இந்த அத்தஹிய்யாத்தில் நபி(ஸல்)அவர்கள் மீது ஸலவாத்து கூறுவது: க.ஃ.பு பின் உஜ்ரா(ரலி) அறிவிப்பதாவது: நபி(ஸல்)அவர்களிடம் ஸலவாத்துக் கூறுவது எப்படி? என்று தோழர்கள் கேட்டபோது,

اَللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ اَللَّهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ

“அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்றாஹீம வஅலா ஆலி இப்றாஹீம இன்னக்க ஹமீதுன் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்றாஹீம இன்னக்க ஹமீதுன் மஜீத்” என்று கூறுங்கள் என நபி(ஸல்) கூறினார்கள். (புகாரி-3370)

13. இரண்டு ஸலாம் கொடுத்தல்: “தொழுகையின் திறவுகோல் உளூவாகும்.(தொழுகைக்கு வெளியேயுள்ள ஆகுமான காரியங்களை) ஹராமாக்கக் கூடியது முதல் தக்பீர் ஆகும். (அவற்றை) ஹலாலாக்கக்கூடியது ஸலாம் கூறுவதாகும்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (திர்மிதி-3, அபூதாவூத்-61, இப்னுமாஜா-275)

நபி(ஸல்)அவர்களின் தொழுகை முறை பற்றி ஆயிஷா (ரலி) கூறும்போது “…ஸலாம் கூறுவதன்

மூலம் தமது தொழுகையை முடித்துக் கொள்வார்கள்" என கூறியுள் ளார்கள். (முஸ்லிம்-498) எனவே தொழுகையிலிருந்து விடுபடுவதற்கு ஸலாம் கூறுவதே மார்க்கத்தின் வழிமுறையாகும். அதுவே தொழுகையின் இறுதியும் தொழுகை முடிந்து விட்டதற்கு அடையாளமும் ஆகும்.

14. இக்கடமைகளை வரிசைக்கிரமமாகச் செய்தல்.

## பாடம் - 8

**தொழுகையின் வாஜிபுகள்:**

**தொழுகையின் வாஜிபுகள்- இரண்டாம் நிலைக் கடமைகள் எட்டாகும். தக்பீரதுல் இஹ்ராம் எனும் முதல் தக்பீர் நீங்கலாக ஏனைய தக்பீர்கள், ருகூவில் 'சுப்ஹான ரப்பியல் அளீம்' என்று கூறுவது, இமாமும் தனியாக நின்று தொழுபவரும் 'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா' என்று கூறுவது, ருகூவிலிருந்து எழுந்ததும் 'ரப்பனா வலகல் ஹம்து' எனக் கூறுவது, ஸுஜூதில் 'சுப்ஹான ரப்பியல் அஃலா' என்று கூறுவது, இரு ஸஜ்தாக்களுக்கிடையே 'ரப்பிக் ஃபிர்லீ ' என்று கூறுவது, முதல் அத்தஹிய்யாத்துக்காக அமர்வது, அதில் அத்தஹிய்யாத்து ஓதுவது,**

---

மூலாசிரியர் தொழுகையின் ருகுன்களைக் கூறிய பின் இந்தப் பாடத்தில் தொழுகையின் வாஜிபுகளைக்

கூறிப்பிட்டுள்ளார். ஏனெனில் ருகுன்கள் வாஜிபுகளை விட மிக முக்கியமானதாகும். ஒருவர் வாஜிபுகளில் ஒன்றை மறதியாக விட்டு விட்டால் மறதிக்கான ஸஜ்தா செய்தால் நிவர்த்தியாகிவிடும். ஆனால் ருகுன்களில் ஒன்றை மறதியாக விட்டாலும் அல்லது வேண்டுமென்றே விட்டாலும் தொழுகையே பாழாகிவிடும்.

1. தக்பீரதுல் இஹ்ராம் நீங்கலாக ஏனைய தக்பீர்கள்: "நபி(ஸல்) அவர்கள் குனியும்போதும் நிமிரும்போதும் உட்காரும்போதும் எழும்போதும் தக்பீர் கூற நான் பார்த்திருக்கிறேன்" எனஇப்னு மஸ்வூத் (ரலி) அறிவிக் கிறார்கள். (திர்மிதி-253, நஸயீ-1130, அஹ்மத்-3478)

2. 3. ருகூவில் "சுப்ஹான ரப்பியல் அளீம்" என்றும் சுஜூதில் "சுப்ஹான ரப்பியல் அஃலா" என்றும் ஒரு தடவை கூறுவதாகும். "நபி(ஸல்) அவர்கள் ருகூவில் சுப்ஹான ரப்பியல் அளீம் என்றும், சுஜூதில் சுப்ஹான ரப்பியல் அஃலா என்றும் கூறுபவர்களாக இருந்தனர்." அறிவிப்பவர்: ஹுதைஃபா(ரலி), (திர்மிதி-262, நஸயீ-998)

4. இமாமும் தனியாக நின்று தொழுபவரும் ஸமிஅல் லாஹு லிமன் ஹமிதாஹ் என்று கூறுவது: "நபி(ஸல்) அவர்கள் தொழுகைக்காக நிற்கும்போது தக்பீர் கூறு வார்கள் பின்பு ருகூவு செய்யும்போதும் தக்பீர் கூறு வார்கள். பிறகு ருகூவிலிருந்து தமது முதுகை உயர்த்தும் போது "ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதாஹ்" எனக் கூறு

வார்கள். பின்பு நிலைக்கு வந்து “ரப்பனா வலகல் ஹம்த்” எனக் கூறுவார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி) நூல்: புகாரி(789), முஸ்லிம்(392)

5. ருகூவிலிருந்து எழுந்ததும் ரப்பனா லகல் ஹம்த் எனக் கூறுவது. முன்னர் கூறப்பட்ட ஹதீஸே இதற்கும் ஆதாரமாகும்.

6. இரு ஸஜ்தாக்களுக்கிடையில் “ரப்பி.்.க் .்.பிர்லீ” என்று கூறுதல்: நபி(ஸல்)அவர்கள் இரு ஸஜ்தாக் களுக்கிடையில் ரப்பி.்.க் .்.பிர்லீ, ரப்பி.்.க் .்.பிர்லீ என்று கூறுபவர்களாக இருந்தனர். அறிவிப்பவர்: ஹுதை.்.பா (ரலி), நூல்: நஸயீ(1133), இப்னுமாஜா(897)

7. முதல் அத்தஹிய்யாத்துக்காக அமர்வது: “நீங்கள் ஒவ்வொரு இரண்டு ரக்அத்துகளிலும் அமர்ந்தால் அத்த ஹிய்யாத்து லில்லாஹி.. என்று ஓதிக்கொள்ளுங்கள்” என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத் (ரலி), நூல்: அஹ்மத்(3945), நஸயீ(1151)

மேலும் நபி(ஸல்)அவர்கள் ளுஹர் தொழுகையில் இந்த இருப்பை மறந்தபோது ஸலாம் கொடுப்பதற்கு முன் மறதிக்காக இரண்டு ஸஜ்தா செய்துள்ளார்கள். (பார்க்க: புகாரி-829)

8. இந்த இருப்பில் அத்தஹிய்யாத்து ஓதுவது: “நீ தொழுகைக்கு நின்றால் தக்பீர் கூறு. பின்பு குர்ஆனில் உனக்கு இலகுவானதை ஓது. தொழுகையின் நடுவில் (இரண்டு ரக்அத் முடிந்த பிறகு) நீ அமர்ந்தால்

அமைதியாக இடது பாதத்தின் மீது அமர்ந்து வலது பாதத்தை நட்டி வைத்துக் கொண்டு அத்தஹிய்யாத்து ஓது.” நபிமொழி (அபூதாவூத்-856)

## பாடம் - 9

**அத்தஹிய்யாத்து:**

**அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய் யிபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன். அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு**

**அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத், அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின், வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத்.**

**பின்னர் கடைசி அத்தஹிய்யாத்தில் நரகம் மற்றும் மண்ணறையின் வேதனையிலிருந்தும் வாழ்க்கை மற்றும் மரணத்தின் சோதனையிலிருந்தும் தஜ்ஜாலின் குழப்பத் திலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடவேண்டும். அதன் பிறகு தான் விரும்பிய துஆவைக்**

**கேட்க வேண்டும். குறிப்பாக ஹதீஸில் வந்துள்ள துஆவாக இருக்க வேண்டும். பின்வரும் துஆ ஹதீஸிலுள்ளது.**

**அல்லாஹு'ம்ம அஇன்னீ அலா திக்ரிக வஷு'க்ரிக வஹு'ஸ்னி இபாததிக.**

**அல்லாஹு'ம்ம இன்னீ ழலம்த்து ந:ப்ஸீ ழுல்மன் கஸீரன் வலா ய:க்பிருத் துனூப இல்லா அன்த :ப:க் :பிர்லீ ம:க்:பிரதன் மின் இன்திக வர்ஹம்னீ இன்னக அன்தல் :க:பூருர் ரஹீம்.**

---

(**குறிப்பு:** முதல் அத்தஹிய்யாத்தில் இரு ஷஹாதத்து களையும் (அதாவது அப்துஹு வரஸூலுஹு வரை) ஓதிய பின்னர் ளுஹர், அஸர், ம:க்ரிப், இஷா ஆகிய தொழுகைகளில் நபியின் மீது ஸலவாத்து ஓதாமல் மூன்றாவது ரக்அத்து தொழுவதற்காக எழ வேண்டும். நபி(ஸல்)அவர்கள் மீது ஸலவாத்து ஓதினால் அது சிறப்பானதே. ஏனெனில் அது பற்றி பொதுவாகவே ஹதீஸ் வந்துள்ளது. அதன் பின்பு மூன்றாவது ரக்அத்துக்காக எழ வேண்டும்.)

“உங்களில் ஒருவர் தொழுதால்,

اَلتَّحِيَّا تُ لله وَ الصَّلَواتُ وَ الطَّيِّبا تُ السَّلاَمُ عَلَيْكَ أَيُّهاَ النَّبِىُّ وَرَحْمَةُ الله وَبَرَكاَتُهُ السَّلاَمُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ الله الصَّا لِحِيْنَ أَشْهَدُ أَنْ لاَ اِلـهَ إلاّ الله وَأَشْهَدُ أنَّ مُحَمَّداً عَبْدُهُ وَرَسُولُهُ

அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய் யிபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹு என்று கூறட்டும். பின்னர் தான் விரும்பிய துஆவைக் கேட்டுக் கொள்ளட்டும்" என நபி(ஸல்)கூறியதாக இப்னு மஸ்வூத் (ரலி) அறிவிக்கிறார்கள். நூல்: புகாரி(831), முஸ்லிம்(402) அத்தஹிய்யாத் சம்பந்தமாக அறிவிக்கப்பட்ட ஹதீஸ் களில் இப்னு மஸ்வூத்(ரலி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸே மிகச் சரியானதாகும்.

(பொருள்: காணிக்கைகள், வணக்கங்கள், நற்பணிகள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியனவாகும். நபியே! அமைதியும் அல்லாஹ்வின் கருணையும் அருட் பேருகளும் உங்கள் மீது உண்டாகட்டும். எங்கள் மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீதும் அமைதி உண்டா கட்டும். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது நபி அவர்கள்

அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சியம் கூறுகிறேன்.)

அல்லாஹ்வின் தூதரே! உங்கள் மீது எப்படி ஸலாம் சொல்ல வேண்டுமென அல்லாஹ் எங்களுக்கு கற்றுக் கொடுத்துள்ளான். உங்கள் மீது எப்படி ஸலவாத்து சொல்வது? என்று நாங்கள் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டோம். அதற்கு அவர்கள்,

اَللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ اَللَّهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ

“அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்றாஹீம வஅலா ஆலி இப்றாஹீம இன்னக்க ஹமீதும் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்றாஹீம இன்னக்க ஹமீதும் மஜீத்” என்று கூறுங்கள் எனக் கூறினார்கள். (புகாரி-3370)

(பொருள்: இறைவா! முஹம்மது நபி(ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் வழிவந்தவர்கள் மீதும் அருள் புரிவா யாக! இப்ராஹீம் நபி மீதும் அவர்களின் வழிவந்தவர்கள் மீதும் நீ அருள் புரிந்தது போன்று. நிச்சயமாக நீ புகழுக்கும் மகத்துவத்திற்கும் உரியவன். இறைவா! முஹம்மது நபி(ஸல்)அவர்கள் மீதும் அவர்களின் வழி

வந்தவர்கள் மீதும் அபிவிருத்தி அருள்வாயாக! இப்ராஹீம் நபி மீதும் அவர்களின் வழி வந்தவர்கள் மீதும் நீ அபிவிருத்தி அருளியது போன்று. நிச்சயமாக நீ புகழுக்கும் மகத்துவத்திற்கும் உரியவன்.)

“உங்களில் ஒருவர் அத்தஹிய்யாத் ஓதினால் நான் விஷயங்களை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடட்டும். (அந்த வகையில்) அவர்

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ جَهَنَّمَ وَمِنْ عَذَابِ الْقَبْرِ وَمِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ وَمِنْ شَرِّ فِتْنَةِ الْمَسِيحِ الدَّجَّالِ

“அல்லாஹும்ம இன்னீ அவூது பிக மின் அதாபி ஜஹன்னம, வமின் அதாபில் கப்ரி, வமின் ஃபித்னத்தில் மஹ்யா, வல் மமாத்தி, வமின் ஷர்ரி ஃபித்னத்தில் மஸீஹித் தஜ்ஜால் என்று கூறட்டும்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி) நூல்: முஸ்லிம்(588)

இதை ஸலாவத்திற்குப் பிறகு ஓத வேண்டும்.

(பொருள்: இறைவா! நரகின் வேதனை, கப்ரின் வேதனையிலிருந்தும் வாழ்க்கை மற்றும் மரணத்தின் சோதனையிலிருந்தும் தஜ்ஜாலின் குழப்பத்தின் கெடுதி யிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.)

என்னுடைய தொழுகையில் நான் ஓதுவதற்காக ஒரு துஆவை எனக்குக் கற்றுத் தாருங்கள் என நபி(ஸல்)

அவர்களிடம் அபூபக்ர்(ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள்

اللَّهُمَّ إِنِّي ظَلَمْتُ نَفْسِيْ ظُلْمًا كَثِيْرًا وَلاَ يَغْفِرُ الذُنُوبَ إِلاَّ أَنْتَ فَاغْفِرْ لِي مَغْفِرَةً مِنْ عِنْدِكَ وَارْحَمْنِي إِنَّكَ أَنْتَ الغَفُورُ الرَّحِيم

அல்லாஹும்ம இன்னீ ழலம்து ந.ஃப்ஸீ ழுல்மன் கஸீரன் வலா ய.ஃக்.ஃபிருத் துனூப இல்லா அன்த .ஃப.ஃக் .ஃபிர்லீ ம.ஃக்.ஃபிரதன் மின் இன்திக்க வர்ஹம்னீ இன்னக அன்தல் .ஃக.ஃபூருர் ரஹீம் எனக் கூறுவீராக!” எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூபக்ர்(ரலி), நூல்: புகாரி (834), முஸ்லிம்(2705)

(பொருள்: யா அல்லாஹ்! எனக்கு நானே அதிகம் அநீதியிழைத்துவிட்டேன். பாவங்களை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. எனவே உன் பிரத்தியேக மன்னிப்பில் என்னை மன்னித்தருள்வாயாக! நிச்சயமாக நீ மன்னிப்பவன்! மிகவும் கருணையுள்ளவன்!)

பொதுவாகத் தொழுகையில் துஆ செய்வது மார்க்க வழிமுறையாகும் என்பதற்கு இந்த ஹதீஸ் ஆதாரமாகும். மேலும் அத்தஹிய்யாத்தில் ஸலவாத்து ஓதி, நான்கு விஷயங்களை விட்டும் பாதுகாப்புத் தேடிய பிறகு துஆ செய்வது துஆ செய்வதற்குரிய இடங்களில் ஒன்றாகும். ஏனெனில் முன்னர் கூறப்பட்ட இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கும் ஹதீஸில் நபி(ஸல்)அவர்கள் “...பின்னர்

தான் விரும்பிய துஆவைக் கேட்டுக் கொள்ளட்டும்” எனக் கூறியுள்ளார்கள். (புகாரி-831, முஸ்லிம்-402) மேலும் ஹதீஸில் வந்த துஆவையும் ஹதீஸில் வராத அதே சமயம் மார்க்கத்தில் தடையில்லாத துஆவையும் தொழுகையில் கேட்கலாம் என்பதற்கும் இந்த ஹதீஸ் ஆதாரமாகும்.

## பாடம் - 10

**தொழுகையின் சுன்னத்துகள்:**

**1. ஆரம்பமாக ஓதும் துஆ**

**2. நிலையின்போது வலது உள்ளங்கையை இடது உள்ளங்கையின் மீது வைத்து நெஞ்சின் மீது கட்டிக் கொள்வது.**

**3. ஆரம்ப தக்பீரின்போதும் ருகூவின்போதும், அதிலிருந்து எழும்போதும், முதல் அத்தஹிய்யாத்திலிருந்து மூன்றாம் ரக்அத்திற்கு எழும்போதும் இரண்டு கைகளையும் இரு தோள் புஜங்களுக்கு நேராகவோ, இரு காதுகளுக்கு நேராகவோ உயர்த்துதல். அப்போது கை விரல்களை (விரிக்காமல்) சேர்த்து வைக்க வேண்டும்.**

**4. ருகூஃ, ஸுஜூதின் தஸ்பீஹை ஒன்றுக்கு மேல் அதிகமாக்கிக் கொள்வது.**

**5. ருகூவிலிருந்து எழுந்ததும் ரப்பனா வலகல் ஹம்த் என்று கூறிய பிறகு ஓத வேண்டிய திக்ர்.**

**6. இரு ஸஜ்தாக்களுக்கிடையே ரப்பிஃக் ஃபிர்லீ என்பதை ஒன்றுக்கு மேல் கூறுவது.**

**7. ருகூவில் தலையை முதுகுக்கு நேராக வைத்துக் கொள்வது.**

**8. ஸுஜூதில் இரு குடங்கைகளை இரு விலாப் புறங்களை விட்டு அகற்றியும், வயிற்றைத் தொடையின் மீது தாங்காமலும் வைத்துக் கொள்வது.**

**9. ஸுஜூது செய்யும்போது இரு முழங்கைகளையும் தரையில் படாதவாறு உயர்த்தி வைப்பது.**

**10. முதல் அத்தஹிய்யாத்திலும் இரு ஸஜ்தாக் களுக்கிடையிலும் இடது காலின் மீது அமர்ந்து வலது காலை நட்டி வைத்துக் கொள்வது.**

**11. கடைசி இருப்பில் இடது காலை வலது கணுக் காலுக்குக் கீழ் வெளிப்படுத்தி வலது காலை நட்டி வைத்து, இருப்பிடம் தரையில் படுமாறு அமர்வது. இந்த இருப்பிற்கு தவர்ருக் என்று சொல்லப்படும்.**

**12. முதல் அத்தஹிய்யாத்தில் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வது.**

**13. கடைசி அத்தஹிய்யாத்தில் துஆச் செய்வது.**

**14. ஃபஜ்ருத் தொழுகை, ஜும்ஆத் தொழுகை, இரு பெருநாள் தொழுகைகள், மழைத் தொழுகை, மக்ரிப், இஷாவின் முந்திய இரு ரக்அத்துகள் ஆகியவற்றில் சப்தமிட்டு ஓதுவது.**

**15. ளுஹர், அஸர், மக்ரிபின் மூன்றாம் ரக்அத், இஷாவின் பிந்திய இரு ரக்அத்துகள் ஆகியவற்றில் சப்தமில்லாமல் ஓதுவது.**

**16. சூரத்துல் ஃபாத்திஹாவுக்குப் பிறகு ஏதாவது ஒரு சூராவை ஓதுவது.**

**நாம் கூறாத இன்னும் பல சுன்னத்துகள் உள்ளன அவற்றையும் பேண வேண்டும்.**

-----------------------------------------------------

தொழுகையில் உள்ள சுன்னத்துகள் இரண்டு வகைப்படும். 1. சொல் ரீதியான சுன்னத்துகள். 2. செயல் ரீதியான சுன்னத்துகள். இவற்றை மூலாசிரியர் தனது மூலத்தில் கூறியுள்ளார். தொழுபவர் இந்த சுன்னத்து களை நிறைவேற்றுவது கட்டாயமல்ல. ஏனைய சுன்னத்து களைப் போலவே இவற்றையும் நிறைவேற்றினால் அதற்குக் கூலி உண்டு. விட்டுவிட்டால் குற்றமில்லை. ஆனாலும் ஒரு முஸ்லிம் இந்த சுன்னத்துகளைப் பேணுவது அவசியமாகும். “எனது சுன்னத்தையும் நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் சுன்னத்தையும் கடை பிடியுங்கள். அவற்றைக் கடவாய்ப் பற்களால் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்” (திர்மிதி 2676)என்ற நபி(ஸல்) அவர்களின் கூற்றை நினைவில் கொள்ள வேண்டும்.

## பாடம் - 11

**தொழுகையை வீணாக்கக்கூடியவை:**

**தொழுகையை வீணாக்கக்கூடிய காரியங்கள் எட்டு. 1. வேண்டுமென்றே தெரிந்து கொண்டே பேசுவது. தெரியாமல் அல்லது மறதியாகப் பேசினால் தொழுகை வீணாகாது 2. சிரித்தல் 3. சாப்பிடுதல் 4. குடித்தல் 5. மறைக்கப்பட வேண்டிய உறுப்புகள் வெளிப்படுதல் 6. முழு உடலுடன் கிப்லாவை விட்டும் திரும்புதல் 7. தேவையற்ற வீணான செயல்கள் அதிகமாக தொடர்ந்து நடைபெறுதல் 8. உளூ நீங்கிவிடுதல்.**

---------------------------------------------------

ஆசிரியர் தொழுகையின் நிபந்தனைகள், ருகுன்கள், வாஜிபுகள், சொல் ரீதியான மற்றும் செயல் ரீதியான சுன்னத்துகள் ஆகியவற்றைக் கூறி முடித்த பின்னர் தொழுகையை வீணாக்கக்கூடியவைகளைக் கூற ஆரம் பித்துள்ளார். ஏனெனில் ஒரு முஸ்லிம் தொழுகையை வீணாக்கக்கூடிய எட்டுக் காரியங்களில் ஏதேனும் ஒன்றைச் செய்துத் தனது தொழுகையைப் பாழ்படுத்து வதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும் எனபதற்காக. இந்த எட்டுக் காரியங்கள் வருமாறு:

1. வேண்டுமென்றே, தொழுகையில் பேசக் கூடாது என்பதைத் தெரிந்து கொண்டே பேசுதல்: மறதியாகவோ தெரியாமலோ பேசினால் அவரது தொழுகை வீணாகாது. “(தொழுகையில்) நாங்கள் மௌனமாக இருக்க வேண்டும் எனக் கட்டளையிடப்பட்டோம்; பேசுவதற்குத்

தடுக்கப்பட்டோம்” என ஸைத் பின் அர்கம் (ரலி) அறிவிக் கிறார்கள். (புகாரி-1200, முஸ்லிம்-539)

2. சிரித்தல்: இது தொழுகையை வீணாக்கிவிடும் என்பதில் அனைவரும் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளனர் என இப்னு முன்திர் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

3, 4. உண்பது, குடிப்பது: நாங்கள் யாரிடத்திலிருந்து படித்துள்ளோமோ அவர்கள் அனைவரும் கடமையான தொழுகையில் வேண்டுமென்றே யாரேனும் உண்ணவோ, குடிக்கவோ செய்தால் அத்தொழுகையை அவர் திருப்பித் தொழ வேண்டுமென ஒருமித்த கருத்து கொண்டுள்ளனர் என இப்னு முன்திர் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.

5. மறைக்க வேண்டிய பகுதி வெளிப்பட்டுவிடுதல்: ஏனெனில் மறைக்க வேண்டிய பகுதியை மறைப்பது தொழுகைக்குரிய நிபந்தனைகளில் ஒன்றாகும். எனவே நிபந்தனை இல்லாத பட்சத்தில் தொழுகை வீணாகிவிடும்.

6. முழு உடலுடன் கிப்லாவை விட்டும் திரும்பி விடுதல்: ஏனெனில் இதுவும் தொழுகையின் நிபந்தனை களில் ஒன்றாகும்.

7. தேவையற்ற வீணான செயல்கள் அதிகமாக தொடர்ந்து ஏற்படுதல்: இதுவும் அறிஞர்களின் ஏகோபித்த முடிவின்படி தொழுகையைப் பாழாக்கிவிடும். இப்னு முந்திர் அவர்கள் இதை கா.ஃபி என்ற நூலில் குறிப்

பிட்டுள்ளார். சிறிதளவு செய்தால் தொழுகை வீணாகாது. ஏனெனில் நபி(ஸல்) உமாமா என்ற குழந்தையைச் சுமந்து கொண்டு தொழுதுள்ளார்கள். அவர்கள் தொழு கையில் நிற்கும்போது இக்குழந்தையைச் சுமந்து கொள்வார்கள். ஸுஜூதுக்குச் சென்றால் கீழே இறக்கி விடுவார்கள்.

8. உளூ நீங்கிவிடுதல்: இதுவும் தொழுகை நிறை வேறுவதற்குரிய நிபந்தனையாகும். எனவே உளூ முறிந்து விட்டால் தொழுகையும் முறிந்விடும்.

## பாடம் - 12

**உளூவின் நிபந்தனைகள்:**

**உளூவின் நிபந்தனைகள் பத்தாகும். 1. முஸ்லிமாக இருத்தல், 2. புத்தி சீர்நிலையில் இருத்தல், 3. பருவம் அடைந்திருத்தல், 4. நிய்யத், 5. உளூ செய்து முடிக்கும் வரை நிய்யத்தை முறிக்காமலிருத்தல், 6. உளூவை அவசியமாக்கும் காரியம் ஏற்படாதிருத்தல், 7. (தேவைப் படின்) உளூவுக்கு முன் தண்ணீராலோ கற்களாலோ மலஜலத் துப்பரவு செய்திருத்தல், 8. தண்ணீர் சுத்தமா னதாகவும் ஆகுமானதாகவும் இருத்தல், 9. உறுப்பு களின் தோல் பகுதியில் தண்ணீர் சென்றடைவதற்குத் தடையாக இருக்கும் பொருளை நீக்குதல், 10. அடிக்கடி**

**சிறுநீர் அல்லது காற்று அல்லது இரத்தப்போக்கு ஏற்படு பவருக்கு தொழுகையின் நேரம் வந்திருக்க வேண்டும்.**

-----------------------------------------------

உளூவின் நிபந்தனைகள்: முஸ்லிமாக இருத்தல், புத்தி சீர்நிலையில் இருத்தல், பருவ வயதை அடைதல், நிய்யத் செய்தல்: எனவே முஸ்லிமல்லாதவரின் உளூ நிறைவேறாது. ஏனெனில் அவன் இஸ்லாத்தை ஏற்காத வரை அவனிடமிருந்து எந்த நற்செயலும் (அல்லாஹ் வால்) ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதால். பைத்தியக்காரனின் உளூவும் நிறைவேறாது. ஏனெனில் அவன் மார்க்கச் சட்டத்திற்கு உட்பட்டவனல்ல. இன்னும் பருவமடையாத சிறுவனின் உளூவும் நிறைவேறாது. உளூ பற்றிய எண்ணம்- நிய்யத் இல்லாமல் குளிர்ச்சிக் காகவோ அல்லது அசுத்தத்தை, அழுக்கை நீக்குவதற் காகவோ உளூ செய்தாலும் நிறைவேறாது.

தண்ணீர் சுத்தமாக இருத்தல்: அசுத்தமாக இருந்தால் அதில் உளூ செய்வது கூடாது.

தண்ணீர் ஆகுமானதாக இருத்தல்: அது பறிக்கப்பட்ட தாகவோ அல்லது மார்க்கம் அனுமதிக்காத வழியில் கிடைத்திருந்தாலோ அதிலிருந்து உளூ செய்வது கூடாது.

முன்னதாக தண்ணீரால் அல்லது கல்லால் மலஜலத் துப்பரவு செய்திருத்தல் வேண்டும் என்பதும் ஒரு நிபந்தனை.

உறுப்புகளின் தோல் பகுதியில் தண்ணீர் சென்றடை வதற்குத் தடையாக இருக்கும் பொருளை அகற்றுதல்:

உளூ செய்பவன் உளூவின் உறுப்புக்களில் களிமண், குழைத்த மாவு, மெழுகு அல்லது நகபாலிஷ் போன்ற சாயம் ஏதும் இருந்தால் அவற்றை நீக்குவது அவசிய மாகும். ஏனெனில் தண்ணீர் எவ்விதத் தடையுமின்றி தோல் பகுதியைச் சென்றடைய வேண்டும் என்பதற்காக.

அடிக்கடி சிறுநீர் அல்லது காற்று பிரிபவருக்கும் அல்லது தொடர் உதிரப்போக்கு உடையவளுக்கும் நேரம் வந்திருத்தல்: ஏனெனில் நபி(ஸல்)அவர்கள் தொடர் உதிரப்போக்குடைய பெண்ணுக்கு ஒவ்வொரு தொழுகைக்கும் உளூ செய்யும்படி கட்டளையிட்டுள் ளார்கள். அல்லாஹ் மிக அறிந்தவன்.

## பாடம் - 13

**உளூவின் ஃபர்ழுகள்:**

**உளூவின் ஃபர்ழுகள் (கடமைகள்) ஆறு.**

**1. முகத்தைக் கழுவுதல். வாய் கொப்பளித்தலும், நாசிக்குத் தண்ணீர் செலுத்துதலும் இதில் அடங்கும். 2. இரண்டு கைகளை முழங்கைகள் வரை கழுவுதல். 3. தலை முழுவதையும் மஸஹ் செய்தல் (ஈரக்கையால் தடவுதல்). இரண்டு காதுகளுக்கு மஸஹ் செய்வதும் இதில் அடங்கும். 4. இரண்டு கால்களையும் கணுக்**

**கால் வரை கழுவுதல். 5. இவையனைத்தையும் வரிசைக் கிரமமாகச் செய்தல். 6. தொடராகச் செய்தல்.**

**முகம், இரு முழங்கைகள், இரு கால்கள் ஆகியவற்றை மூன்று தடவை கழுவுவதும் வாய்க் கொப்பளித்தல், நாசிக்குத் தண்ணீர் செலுத்துதல் ஆகியவற்றை மூன்று முறை செய்வதும் விரும்பத்தக்கதாகும். எனினும் இவை அனைத்தையும் ஒரு முறை செய்தால் ஃபர்ழு (கடமை) நிறைவேறிவிடும். ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் அறிவிப் பதுபோல் தலையை பலமுறை தடவுவது விரும்பத் தக்கதல்ல.**

---

உளூவின் ஃபர்ழுகள்: நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் தொழுகைக்காகத் தயாராகும்போது உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரை உங்கள் கை களையும் கழுவிக் கொள்ளுங்கள். உங்கள் தலைகளை (ஈரக்கையால்) தடவிக் கொள்ளுங்கள். இரு கணுக் கால்கள் வரை உங்கள் கால்களையும் (கழுவிக் கொள்ளுங்கள்). (அல்குர்ஆன் 5:6)

1. முகத்தைக் கழுவுதல்- வாயும் மூக்கும் இதில் அடங்கும். அல்லாஹ் கூறுகிறான்: உங்கள் முகங் களையும்,... கழுவிக் கொள்ளுங்கள். (5:6) வாய்க் கொப்பளிப்பதும் நாசிக்குத் தண்ணீர் செலுத்துவதும்

கடமை என்பதற்கு இவ்விரண்டும் முகத்தைச் சேர்ந்தது என்பதே சான்றாகும்.

இவ்வாறே நபி(ஸல்)அவர்களின் உளூவைப் பற்றிக் கூறிய எல்லா நபித்தோழர்களும் வாய்க் கொப்பளித்தலையும் நாசிக்குத் தண்ணீர் செலுத்துதலையும் சேர்த்தே கூறியுள்ளனர். மேலும் அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கின்ற ஒரு நபிமொழியில் பின்வருமாறு வந்துள்ளது: “உங்களில் ஒருவர் உளூ செய்தால் அவர் தனது நாசிக்குள் தண்ணீரைச் செலுத்தி அதை சிந்திக் கொள்ளட்டும்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி-162, முஸ்லிம்-237)

2. இரண்டு கைகளையும் கழுவுதல்: “முழங்கைகள் வரை உங்கள் கைகளையும் கழுவிக் கொள்ளுங்கள்.” (அல்குர்ஆன் 5:6) முழங்கைகள் வரை என்றால் முழங் கைகளுடன் என்று பொருள். எனவே முழங்கைகளைக் கழுவது கடமையாகும். நபி(ஸல்)அவர்களும் உளூவின் போது தமது முழங்கைகளைக் கழுவுவார்கள்.

3. தலை முழுவதையும் தடவுதல். இரண்டு காதுகளும் தலையில் உட்பட்டதாகும். உங்கள் தலைகளை (ஈரக் கையால்) தடவிக் கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 5:6) மேலும் “இரண்டு காதுகளும் தலையைச் சேர்ந்ததே” என்பது நபிமொழி. நபி(ஸல்)அவர்கள் உளூ செய்யும்

போது தமது தலைக்கும் இரு காதுகளுக்கும் மஸஹ் செய்வார்கள்.

4. இரு கால்களையும் கணுக்கால்களுடன் சேர்த்துக் கழுவுதல்: இரு கணுக்கால்கள் வரை உங்கள் கால் களையும் (கழுவிக் கொள்ளுங்கள்). (அல்குர்ஆன் 5:6)

5. வரிசைக்கிரமமாகச் செய்தல்: ஏனெனில் உளூவில் கழுவ வேண்டிய உறுப்புக்களை அல்லாஹ் வரிசைக் கிரமமாகவே கூறியுள்ளான். அது மட்டுமல்ல, கழுவ வேண்டிய இரண்டு உறுப்புக்களை (கைகள், கால்கள்) சேர்த்துக் கூறாமல் அவற்றுக்கிடையே தடவ வேண்டிய உறுப்பை (தலையை) நுழைத்துப் பிரித்துக் கூறியுள்ளான். இவ்வாறு அல்லாஹ் கூறியுள்ளதன் நோக்கம் உளூவை வரிசைக்கிரமமாகச் செய்ய வேண்டும் என்பதே. நபி(ஸல்) அவர்களும் இதே முறைப்படி உளூவை வரிசைக்கிரம மாகவே செய்துள்ளார்கள். அவர்கள் தமது சொல்லாலும் செயலாலும் திருக்குர்ஆனுக்கு விளக்கம் அளிப்பவர்கள்.

6. தொடராகச் செய்தல்: அதாவது முந்தைய உறுப்பு காய்வதற்குள் அடுத்த உறுப்பைக் கழுவிவிடுவதாகும். நபி (ஸல்) அவர்கள் தான் தமது சமுதாயத்திற்கு ஷரீஅத்தைக் கொண்டு வந்தவர்கள். அதன் சட்ட திட்டங்களை விளக்கிக் கூறியவர்கள். அவர்களின் உளூவைப் பற்றி விவரித்துக் கூறிய அனைத்து நபித் தோழர்களும் தொடராகவே செய்து காட்டினர்.

## பாடம் - 14

**உளூவை நீக்கும் காரியங்கள்:**

**உளூவை நீக்கும் காரியங்கள் ஆறு.**

**1. முன், பின் துவாரங்கள் வழியாக ஏதேனும் வெளியாதல், 2. உடலிலிருந்து அதிக அசுத்தம் வெளியாதல், 3. தூக்கம் அல்லது வேறு காரணங்களால் உணர்வு நீங்குதல், 4. துணியின்றி முன், பின் துவாரத்தைக் கையால் தொடுதல். 5. ஒட்டக இறைச்சி உண்ணுதல் 6. இஸ்லாத்தை விட்டும் வெளியேறுதல்- அல்லாஹ் எம்மையும் இதர முஸ்லிம்களையும் இதிலிருந்து பாது காப்பானாக!**

**முக்கியக் குறிப்பு: மய்யிதைக் குளிப்பாட்டுவதைப் பொறுத்தவரை அதனால் உளூ நீங்காது என்பது தான் சரியான கூற்று. பெரும்பாலான அறிஞர்களின் கருத்தும் இது தான். காரணம் இதனால் உளூ நீங்கும் என்பதற்கு ஆதாரம் இல்லை. எனினும் குளிப்பாட்டுபவரின் கை, மய்யிதின் உறுப்பில் துணியின்றி பட்டுவிட்டால் அவர் மீண்டும் உளூ செய்ய வேண்டும். எனவே குளிப்பாட் டுபவர் துணியுடன்தான் உறுப்பைத் தொட வேண்டும்.**

**இவ்வாறே ஒரு பெண்ணை ஒருவர் இச்சையுடனோ இச்சையின்றியோ தொட்டால் (இச்சை நீர்) ஏதும் வெளியாகாத வரை உளூ முறியாது என்பதே அறிஞர் களின் இரு வேறு கூற்றுக்களில் சரியான கூற்றாகும்.**

**ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் தமது மனைவியரில் ஒருவரை முத்தமிட்ட பின்பு உளூ செய்யாமலேயே தொழுதுள்ளார்கள்.**

**குர்ஆனிலுள்ள நிஸா, மாயிதா என்ற இரு அத்தியா யங்களில் "பெண்களைத் தீண்டினால்" என்று வரக் கூடிய வசனத்தின் கருத்தாவது, அறிஞர்களின் இரு வேறு கூற்றுக்களில் சரியான கூற்றின்படி '(உடலுறவு மூலம்) தீண்டினால்' என்பதே. இப்னு அப்பாஸ் (ரலி) மற்றும் முன்னோர், பின்னோர்களில் பல அறிஞர்களின் கருத்தும் இதுவே. நேர்வழிகாட்ட அல்லாஹ் போது மானவன்!**

-------------------------------------------------

முந்தைய பாடத்தில் உளூவைப் பற்றிக் கூறிய ஆசிரியர் இங்கு உளூவை முறிக்கக்கூடிய காரியங் களை விளக்க விரும்புகிறார். ஏனெனில் ஒரு முஸ்லிம் தன் மார்க்க விஷயத்தில் தெளிவான விளக்கம் உடைய வனாக இருக்க வேண்டும் என்பதற்காக.

உளூவை முறிக்கக்கூடிய காரியங்கள் வருமாறு:

1. முன், பின் துவாரங்களிலிருந்து ஏதேனும் வெளி யாதல்: அது குறைவாக இருப்பினும் சரி, அதிகமாக இருப்பினும் சரி. அது இருவகைப்படும். ஒன்று: மலஜலம் போன்று வழக்கமாக வரக்கூடியவை. எவ்விதக் கருத்து

வேறுபாடின்றி இது உளூவை முறித்து விடும். இந்தக் கருத்தை இப்னு அப்துல்பர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: அல்லது உங்களில் ஒருவர் மல, ஜலம் கழித்து வந்தால்...தண்ணீர் கிடைக்காத போது தூய்மையான மண்ணில் தயம்மும் செய்து கொள்ளுங்கள். (5:6)

இரண்டு: புழு, முடி, கல் போன்ற எப்போதேனும் வரக் கூடியவை: இதுவும் உளூவை முறித்துவிடும். ஏனெனில் நபி(ஸல்) தொடர் உதிரப்போக்கு உடையவளிடம் “ஒவ்வொரு தொழுகைக்கும் நீ உளூச் செய்து கொள்” எனக் கூறியுள்ளனர். (புகாரி-228) இத்தகைய இரத்தம் வழமையாக வரக்கூடியதல்ல. மேலும் இது முன், பின் துவார வழியாக வருவதால் வழமையாக வரக்கூடியதற்கு ஒப்பாகிவிட்டது.

2. உடலிலிருந்து அதிக அளவு அசுத்தம் வெளி யேறுதல்: சிறிதளவு அசுத்தம் வெளியேறுவதால் உளூ முறியாது. உதாரணமாக இரத்தம். இது அதிகமாக வெளி யானால் உளூ முறிந்துவிடும். குறைவாக வெறியேறினால் உளூ முறியாது. ஏனெனில் இரத்தம் குறித்து இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் கூறும்போது, “இது அதிகமாக வெளியேறினால் உளூவை திரும்பச் செய்வது கடமை யாகும்” எனக் கூறியுள்ளனர். இப்னு உமர்(ரலி) அவர்கள் தமது உடலில் இருந்த ஒரு கட்டியை நசுக்கியதும் இரத்தம் வெளியானது. பிறகு உளூ செய்யாமலேயே

தொழுதார்கள். இவ்விருவரின் கருத்துக்கு நபித்தோழர் களில் யாரும் முரண்படாததால் இது எல்லோரின் ஒருமித்த கருத்தாக ஆகிவிட்டது.

3. தூக்கம் அல்லது வேறு காரணங்களால் உணர்வு நீங்குதல்: உதாரணமாக பைத்தியம், மயக்கம், போதை போன்று. “காற்று வெளியேறிவிட்டதா என்பதைக் கண் காணிப்பது கண் ஆகும். எனவே யாரேனும் தூங்கி விட்டால் அவர் உளூ செய்து கொள்ளட்டும்” என நபி (ஸல்) கூறினார்கள். (இப்னுமாஜா-477, அபூதாவூத்-203, அஹ்மத்-845, அல்பானி அவர்கள் இந்த ஹதீஸை ஹஸன்-அழகானது என்று கூறியுள்ளார்கள்.) தூக்கத்தை விட மயக்கம், பைத்தியம், போதை ஆகியவை அதிகம் உணர்வை நீக்கிவிடுவதால் அவை அவசியம் உளூ வையும் நீக்கிவிடும்.

4. துணியின்றி முன், பின் துவாரத்தைத் தொடுதல்: “யாரேனும் தனது மர்ம உறுப்பைத் தொட்டால் அவர் உளூ செய்யட்டும்” என்பது நபிமொழி. (நஸயி-440, இப்னுமாஜா-481, அல்பானி இதை சரி கண்டுள்ளார்.)

5. ஒட்டக இறைச்சி சாப்பிடுவது: நபி(ஸல்)அவர்களிடம் ஒரு மனிதர் “ஆட்டிறைச்சி சாப்பிட்டால் நான் உளூ செய்ய வேண்டுமா?” எனக் கேட்டார். அதற்கு அவர்கள், “நீ விரும்பினால் உளூ செய்! நீ விரும்பினால் உளூ செய்யாதே!” எனக் கூறினார்கள். “ஒட்டக இறைச்சி சாப்பிட்டால் நான் உளூ செய்ய வேண்டுமா?” என

கேட்டதும், “ஆம்! ஒட்டக இறைச்சி சாப்பிட்டால் உளூ செய்து கொள்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஜாபிர் பின் ஸமுரா(ரலி), (முஸ்லிம்-360)

6. இஸ்லாத்தை விட்டும் வெளியேறுதல்: அல்லாஹ் இதை விட்டும் நம்மைக் காப்பாற்றுவானாக! (நபியே!) நீர் இணை கற்பித்தால் உமது நல்லறம் அழிந்து விடும். (அல்குர்ஆன் 39:65)

மய்யித்தைக் குளிப்பாட்டுவது மற்றும் பெண்களைத் தொடுவது தொடர்பான சட்டம் குறித்து மூலாசிரியர் அறிஞர்களின் கருத்தை மூலத்தில் விளக்கியுள்ளார். மேலும் இவ்விரண்டு காரியத்திலும் உளூ முறியாது என்ற கருத்துக்கே அவர்கள் முன்னுரிமை கொடுத்துள் ளார்கள். அல்லாஹ் மிக அறிந்தவன்!

## பாடம் - 15

**ஒவ்வொரு முஸ்லிமுக்கும் மார்க்கம் வலியுறுத்துகின்ற நற்குணங்கள்:**

**ஒவ்வொரு முஸ்லிமும் மர்க்கம் வலியுறுத்தக்கூடிய நற்குணங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றுள் சில வருமாறு: உண்மை, நாணயம், கற்பொழுக்கம், நாணம், வீரம், தர்மம், வாக்குமீறாமை, அல்லாஹ் விலக்கிய அனைத்தையும் விட்டும் விலகுதல், அண்டை வீட்டாரிடம் நல்லமுறையில்**

நடந்துகொள்ளுதல், தமது சக்திக்கேற்ப தேவையுடையோருக்கு உதவுதல், மேலும் குர்ஆனும், ஹதீசும் வலியுறுத்துகின்ற இன்னும் பல நற்குணங்கள் உள்ளன.

## பாடம் - 16

**இஸ்லாமிய ஒழுக்கங்களைப் பேணுதல்:**

இஸ்லாமிய ஒழுக்கங்களில் சில வருமாறு: ஸலாம் கூறுதல், மலர்ந்த முகம் காட்டுதல், வலது கரத்தால் உண்ணல், குடித்தல், உண்ணும்போதும் பருகும் போதும் பிஸ்மில்லாஹ் கூறுதல், முடிவில் அல்ஹம்து லில்லாஹ் கூறுதல், தும்மியவன் அல்ஹம்து லில்லாஹ் கூறுதல், தும்மியவன் அல்ஹம்து லில்லாஹ் கூறினால் அதைக் கேட்பவர் யர்ஹமுகல்லாஹ் என்று கூறுதல், நோயாளியை நலம் விசாரித்தல், ஜனாஸாத் தொழுகை தொழுவதற்காகவும், ஜனாஸாவை அடக்கம் செய்வதற் காகவும் அதைப் பின்தொடர்ந்து செல்லுதல், பள்ளி வாசல், அல்லது வீட்டில் நுழையும்போதும், வெளியேறும் போதும் மார்க்கம் கூறியபடி நடத்தல், பயணத்தின் ஒழுங்குகளைப் பேணுதல், பெற்றோர், உறவினர், அண்டை வீட்டார், சிறியோர், பெரியோர் ஆகிய அனைவரிடமும் நல்லமுறையில் நடந்து கொள்ளல், ஒருவருக்கு குழந்தை பிறந்தால் அவருக்கு வாழ்த்துக் கூறுதல்,

**மணமக்களை வாழ்த்துதல், துன்பத்தில் ஆட்பட்டோருக்கு ஆறுதல் கூறல், இஸ்லாம் கற்றுத் தந்த முறையில் ஆடை அணிதல், கழற்றுடுதல், செருப்பு அணிதல் மற்றும் பல ஒழுக்கங்கள்.**

-------------------------------------------------

மூலாசிரியர் முந்தைய பாடங்களில் சிறிய, பெரிய மார்க்கச் சட்டங்களை விளக்கிக் கூறிய பின்னர் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் மார்க்கம் வலியுறுத்துகின்ற நற்குணங்கள் மற்றும் ஒழுக்கங்களில் சிலவற்றை இங்கு விளக்குகிறார். முஸ்லிம் சகோதரர்களே! இவற்றைக் நீங்கள் கடைப்பிடித்து மக்களுக்கு சிறந்த முன்மாதிரி யாய்த் திகழ வேண்டும். அல்லாஹ் எமக்கும் உங்க ளுக்கும் அதற்கு நல்லருள் புரிவானாக! இவற்றைப் பற்றிப் பிடிப்பதற்கு ஆர்வமூட்டும் விதமாக திருக்குர் ஆனிலும் நபிமொழிகளிலும் ஏறாளமான சான்றுகள் உள்ளன. விரிவை அஞ்சி அவை இங்கு தவிர்க்கப்படு கின்றன.

இவற்றை நடைமுறைப்படுத்துவதில் நபி(ஸல்) அவர்கள் உங்களுக்கு முன்மாதிரியாய் இருக்கட்டும். நபி(ஸல்) அவர்களின் குணம் பற்றி ஆயிஷா(ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, “அவர்களின் குணம் குர்ஆனாக இருந்தது” எனக் கூறினார்கள். (முஸ்லிம்-746) நபி(ஸல்) அவர்கள் உண்மை, நம்பிக்கை, வீரம், ஈகை, அல்லாஹ் விலக்கிய அனைத்து தீமைகளை விட்டும்

விலகியிருத்தல் ஆகிய குணங்களில் பிரபலமாய்த் திகழ்ந்தார்கள். அவர்களின் வழியிலேயே சங்கைக்குரிய அவர்களின் ஸஹாபாக்களும் சென்றனர். ஆரம்ப காலங் களில் முஸ்லிம் வியாபாரிகளின் நடவடிக்கைகள் மூலமா கத்தான் உலகின் பல பகுதிகளிலும் இஸ்லாம் பரவியது. அவர்கள் உண்மையாளர்களாய், நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உரியவர்களாய்த் திகழ்ந்தார்கள்.

முஸ்லிம் சகோதரர்களே! இவ்வழகிய பண்புகளைக் கடைபிடிப்பவர்களாக நீங்களும் இருக்க வேண்டுமென நான் அல்லாஹ்விடத்திலும் பிறகு உங்களிடத்திலும் ஆதரவு வைக்கின்றேன்.

எனவே சொல்லிலும் செயலிலும் வாய்மையைக் கடைபிடியுங்கள். ஒன்றைச் செய்வதிலும் விடுவதிலும் நம்பிக்கையுடன் நடந்து கொள்ளுங்கள். சுயமரியாதை, உள்ளதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்ளல், நாணம், ஒழுக்கம், வீரம், வாக்குறுதியை நிறை வேற்றல், ஈகை, தூய்மை ஆகிய பண்புகளையும் கடைப் பிடியுங்கள்.

அண்டை வீட்டாரிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அவருக்குரிய உரிமைகள், கடமைகள் ஏராளம் உள்ளன. தேவையுடையோருக்கு உதவி செய்யுங்கள். ஒரு அடியான் தனது சகோதரனுக்கு உதவும் போதெல்லாம் அல்லாஹ் அவனுக்குதவுகிறான். உங்களுக்குத் தெரிந்தவருக்கும் தெரியாதவருக்கும்

ஸலாம் கூறுங்கள். இது சுன்னத்தாகும். இது நேசத்தை உண்டாக்கும். பாகுபாட்டையும் அந்நியத்தனத்தையும் அகற்றும். பிற முஸ்லிம் சகோதரர்களுடன் மலர்ந்த முகம் காட்டுங்கள். ஏனெனில் இதுவும் ஒரு தர்மமாகும்.

நபி(ஸல்)அவர்கள் காட்டிய வழியில் வலது கையால் உண்ணுங்கள், பருகுங்கள். பள்ளியில் நுழையும் போது வலது காலை வைத்து நுழைவது, வெளியே வரும்போது இடது காலை வைத்து வெளியேறுவது, மற்றும் அந்த நேரங்களில் ஹதீஸில் வந்துள்ள துஆவை ஓதுவது என்ற நபிவழியைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். வீட்டினுள் நுழையும் போதும் வெளியேறும் போதும் கூற வேண்டிய துஆவைப் பேணிக் கொள்ளுங்கள். இவ்வாறு நடந்துகொண்டால் அல்லாஹ்வின் பாதுகாவல் கொண்டு பாதுகாக்கப்படுவீர்கள். அவனது அக்கரையும் கவனமும் உங்களுக்குக் கிட்டும். நீங்கள் பயணம் மேற்கொள் ளும்போது பயணத் துஆவை மறந்து விடாதீர்கள்.

உங்கள் பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள். அவர்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களுக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமை மகத்தானது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். திருக் குர்ஆனும், ஹதீஸும் இதற்கு சான்று பகர்கின்றன. இதில் அலட்சியமாக இருந்து விடாதீர்கள். பிறகு கைசேதப் படுவீர்கள். அது கைசேதப்படும் நேரமாக இருக்காது. உறவினர், அண்டை வீட்டார், பெரியோர், சிறியோர் என

அனைவருடனும் நல்ல முறையில் நடந்து கொள்ள மறக்காதீர்கள். இது அல்லாஹ் மற்றும் அவன் தூதரின் வழிகாட்டுதலாகும். அல்லாஹ் கூறுகிறான்:

“நன்மை செய்யுங்கள். திண்ணமாக நன்மை செய் வோரை அல்லாஹ் நேசிக்கிறான்.” (2:195) “உங்கள் செல்வங்களைக் கொண்டு மக்களிடம் தாரளமாக நடந்து கொள்ள முடியாது. எனினும் உங்களின் முக மலர்ச்சி மற்றும் அழகிய குணங்களின் மூலமே அவர்களிடம் தாரளமாக நடந்து கொள்ள முடியும்” என நபி(ஸல்) கூறினார்கள். (ஹாக்கிம்-427) “நீ எங்கிருந்த போதிலும் அல்லாஹ்வை அஞ்சிக்கொள். தீமை செய்துவிட்டால் தொடர்ந்து நன்மையைச் செய்துவிடு. அது அத்தீமையை அழித்துவிடும். மனிதர்களிடம் நற்பண்புகளுடன் நடந்து கொள்” என முஆத்(ரலி) அவர்களிடம் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி-1987)

குழந்தை பிறந்தவருக்கு வாழ்த்துக் கூறுங்கள். ஹதீஸில் வந்துள்ள துஆவைக் கொண்டு அவருக்காக துஆ செய்யுங்கள். சோதனையில் ஆட்பட்ட உங்கள் சகோதரர்களுக்கு ஆறுதல் கூறுங்கள். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய கூலி போன்றே உங்களுக்கும் கிடைக்கும். இவ்வாறே ஏனைய இஸ்லாமிய நற்குணங் களையும் ஒழுக்கங்களையும் பற்றிப் பிடித்துக் கொள் ளுங்கள். தீய குணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இஸ்லாமிய நற்குணங்களையும் ஒழுக்கங்களையும்

பற்றிப் பிடித்து, தீய குணங்களை விட்டும் விலகிக் கொள் வோர்களில் எங்களையும் உங்களையும் அல்லாஹ் ஆக்கி அருள்வானாக!

## பாடம் - 17

**ஷிர்க் மற்றும் அனைத்து வகையான பாவங்களை விட்டும் எச்சரித்தல்: இப்பாவங்களில் நாசத்தைத் தரக் கூடிய ஏழு பாவங்களும் அடங்கும். அவை, அல்லாஹ் வுக்கு இணை வைத்தல், சூனியம் செய்தல், அல்லாஹ் புனிதப்படுத்தியிருக்கின்ற ஒரு உயிரை நியாயமின்றிக் கொலை செய்தல், அநாதைகளின் பொருளை உண் ணுதல், வட்டி உண்ணுதல், போர்க்களத்தில் புறமுதுகு காட்டுதல், முஃமினான கற்புள்ள அப்பாவிப் பெண்களை அவதூறு கூறல் ஆகியனவாகும்.**

**பெற்றோரை நிந்தித்தல், உறவினர்களை முறித்து வாழல், பொய் சாட்சி சொல்லுதல், பொயச் சத்தியம் செய்தல், அண்டை வீட்டாரைத் துன்புறுத்தல், மக்களின் உயிர், உடமை, மானம், மரியாதை அகியவற்றில் அநீதி யிழைத்தல், இன்னும் அல்லாஹ்வும் அவன் தூதரும் தடைசெய்துள்ள அனைத்துக் காரியங்களும் பாவங் களில்லுள்ளதாகும்.**

---

முந்தைய பாடங்களில் ஆசிரியர் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் மார்க்கம் வலியுறுத்திய சில நற்குணங்களையும் இஸ்லாமிய ஒழுக்கங்களையும் கூறி முடித்ததும் இந்தப் பாடத்தில் இணைவைப்பின் விபரீதத்தையும் அதை விட்டும், நாசத்தைத் தரக்கூடிய ஏழு பாவங்கள் உட்பட ஏனைய அனைத்துப் பாவங்களை விட்டும் எச்சரிக்க விரும்புகிறார். ஏனெனில் சமுதாயம் இவற்றில் விழுந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான்.

“நாசத்தைத் தரக்கூடிய ஏழு பாவங்களை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறிய போது “அல்லாஹ்வின் தூதரே! அவை என்னென்ன?” எனத் தோழர்கள் கேட்டனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள், “அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், சூனியம் செய்தல், அல்லாஹ் புனிதப்படுத்தியிருக்கின்ற ஒரு உயிரை நியாயமின்றிக் கொலை செய்தல், அநாதைகளின் பொருளை உண்ணுதல், வட்டி உண்ணுதல், போர்க் களத்தில் புறமுதுகு காட்டி ஓடுதல், மு.்.மினான கற்புள்ள அப்பாவிப் பெண்கள் மீது அவதூறு கூறுதல்” என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி(2767), முஸ்லிம்(89)

இப்பாவங்களுக்கு “நாசத்தைத் தரக்கூடியவை” என்று சொல்லப்படுவதற்குக் காரணம் இவற்றைச் செய்வதனால் இவ்வுலகில் தண்டனையும் மறுமையில் வேதனையும் கிடைப்பதன் மூலம் அவனுக்கு நாசம் ஏற்பட்டுவிடும்.

ஷிர்க்கைப் பற்றிய ஹதீஸ் நான்காம் பாடத்தில் சொல்லப் பட்டிருக்கின்றது அதைப் பார்வையிடவும்.

சூனியம் என்பது ஒருவகை மந்திரித்தலும். உடல் அளவிலோ, உள்ளத்திலோ பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய சில வேலைகளாகும். நோய் நொடியை ஏற்படுத்துவது, மரணத்தை ஏற்படுத்துவது, கணவன், மனைவி இடையே பிரிவினையை உண்டு பண்ணுவதெல்லாம் இந்த வேலை களில் அடங்கும். இல்லாததை இருப்பது போல மனிதர் களின் கண்களுக்கு காட்டுவதும் சூனியத்தைச் சேர்ந்த தாகும். தாஹா அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

“மூஸாவே! நீர் போடுகிறீரா? நாங்கள் முதலில் போடட்டுமா?” என்று (சூனியக்காரர்கள்) கேட்டனர். “இல்லை! நீங்களே போடுங்கள்” என்று அவர் கூறினார். உடனே அவர்களின் கயிறுகளும் கைத்தடிகளும் அவர் களின் சூனியத்தால் சீறுவதைப் போல் அவருக்குத் தோற்றமளித்தது. (20:65,66)

சூனியம் செய்வது தடை செய்யப்பட்டதாகும். ஏனெனில் இது இறைநிராகரிப்பாகும்; ஈமானுக்கும் ஏகத்துவத்துக்கும் முரணானதுமாகும்.

“நிச்சயமாக நாங்கள் சோதனையாக இருக்கிறோம். (இதைக் கற்று) நீ நிராகரித்து விடாதே” என்று கூறாமல் அவ்விருவரும் இ(ந்த சூனியத்)தை யாருக்கும் கற்றுக் கொடுப்பதில்லை. (அல்குர்ஆன் 2:102)

சூனியம் செய்பவனுக்குரிய தண்டனை மரண தண்டனையாகும். ஹதீஸில் வந்துள்ள ஏழு பாவங்களும் அவையன்றி மூலாசிரியர் கூறிய மற்ற பாவங்களும் குர்ஆன், ஹதீஸ் ஆதாரத்தின் அடிப்படையில் தடை செய்யப்பட்டவையாகும்.

இத்தகைய பாவங்களை விட்டும் முழுமையாகத் தவிர்ந்து கொள்வது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். இவற்றில் ஏதேனும் ஒன்றை ஒருவன் செய்துவிட்டால் அதிலிருந்து விலகி, அதற்காக வருந்தி, திரும்பவும் அந்தப் பாவத்தைச் செய்ய மாட்டேன். அது மட்டுமல்ல இனி எந்தப் பாவத்தையும் செய்ய மாட்டேன் என உறுதி மேற்கொள்ள வேண்டும்.

மேலும் இத்தகைய பாவங்களை விட்டும் தன் பொறுப்பில் உள்ளவர்களைத் தடுக்க வேண்டும். இது போன்ற பாவங்கள் குறித்தும் இதனால் இறைமார்க் கத்திற்கு ஏற்படும் அபாயம் குறித்தும் தனது முஸ்லிம் சகோதரர்களை எச்சரிக்க வேண்டும். ஏனெனில் இப்பணி நன்மையிலும் இறையச்சத்திலும் ஒருவருக்கொருவர் உதவுதல், நன்மையை ஏவி, தீமையைத் தடுத்தல், மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்தல் ஆகிய நற்பணிகளைச் சேர்ந்ததாகும். நபிமார்களின் வழியும் இதுவே. “இதுவே எனது பாதை. நானும் என்னைப் பின்பற்றியோரும் தெளிவான விளக்கத்தில் இருந்து

கொண்டு அல்லாஹ்வை நோக்கி அழைக்கிறோம்" என்று (நபியே!) கூறுவீராக! (அல்குர்ஆன் 12:108)

எல்லாம் வல்ல அல்லாஹ் எங்களையும் உங்களையும் அனைத்துப் பாவங்களை விட்டும் தீமைகளை விட்டும் பாதுகாப்பானாக! உறுதியான கொள்கையின் மூலம் இவ்வுலக வாழ்க்கையிலும் மறுமையிலும் நம்மை நிலைப்படுத்துவானாக! திண்ணமாக என் இறைவன் செவியேற்பவன்! பிரார்த்தனைகளுக்குப் பதிலளிப்பவன்!

## பாடம் - 18

**மய்யித்தை அடக்கம் செய்வதற்கான முன்னேற்பாடுகள், அதற்குத் தொழுவித்தல், அடக்கம் செய்தல்:**

**இதன் விளக்கம் பின்வருமாறு:**

**மய்யித்தை அடக்கம் செய்வதற்கான முன்னேற்பாடுகள்:**

**1. ஒருவர் இறந்துவிட்டார் என உறுதியாகிவிட்டால் அவரது இரு கண்களையும் மூடி, நாடியைக் கட்ட வேண்டும்.**

**2. முஸ்லிமான மய்யித்தைக் குளிப்பாட்டுவது கடமையாகும். எனினும் அவர் போரில் மரணமடைந்த உயிர்த் தியாகியாக இருந்தாலே தவிர. அவரைக் குளிப்பாட்டக் கூடாது. அவருக்குத் தொழவைக்கவும் கூடாது. மாறாக அவர் உடுத்தியிருந்த ஆடையுடனேயே அவரை அடக்கம் செய்ய வேண்டும். ஏனெனில்**

உஹதுப் போரில் கொல் லப்பட்டோரை நபி (ஸல்) அவர்கள் குளிப்பாட்டவும் மில்லை அவர்களுக்குத் தொழவைக்கவுமில்லை,

3. மய்யித்தைக் குளிப்பாட்டும் முறை: மய்யித்தின் மர்மஸ்தானத்தை மறைக்க வேண்டும். பின்பு மய்யித்தை சற்று நிமிர்த்தி அதன் வயிற்றை சற்று அழுத்தித் தடவ வேண்டும். பின்பு குளிப்பாட்டுபவர் தனது கையில் ஒரு துணியை அல்லது அதுபோன்று ஏதேனும் ஒன்றைச் சுற்றிக் கொண்டு மய்யித்தின் முன், பின் துவாரங் களிலிருந்து வெளியாகிய கழிவுகளைச் சுத்தம் செய்ய வேண்டும். பின்னர் தொழுகைக்கு உளூ செய்வது போல உளூ செய்விக்க வேண்டும்.

பின்பு தலையையும் தாடியையும் இலந்தை இலை அல்லது அதுபோன்ற நறுமணம் கலந்த தண்ணீரால் கழுவ வேண்டும். பின்னர் அதே நீரால் மய்யித்தின் வலது பாகமும் பிறகு இடது பாகமும் குளிப்பாட்ட வேண்டும். இவ்வாறே மூன்று தடவை குளிப்பாட்ட வேண்டும். ஒவ்வொரு தடவையும் மய்யித்தின் வயிறை மெதுவாகத் தடவ வேண்டும். கழிவு ஏதும் வெளி யானால் அதை சுத்தம் செய்து துவாரத்தைப் பஞ்சால் அல்லது வேறு ஏதேனுமொன்றைக் கொண்டு அடைக்க வேண்டும். அது துவாரத்தைப் பற்றிக் கொள்ளவில்லை யெனில் களிமண், அல்லது

**பிளாஸ்டர் போன்ற நவீன மருத்துவ சாதனங்களால் அடைத்திட வேண்டும். பின்னர் மீண்டும் உளூ செய்விக்க வேண்டும்.**

**மூன்று முறை குளிப்பாட்டியும் சுத்தமாகாவிட்டால் ஐந்து அல்லது ஏழு முறை குளிப்பாட்ட வேண்டும். பின்பு ஒரு துணியால் துடைக்க வேண்டும். அதன் பிறகு வாசனைத் திரவியத்தை கக்கத்திலும், தொடை இடுக்கு களிலும், சுஜூத் செய்யும்போது தரையில்படும் உறுப்பு களிலும் தடவ வேண்டும். உடல் முழுவதும் தடவி னாலும் நன்றே. நறுமணப் புகை கொண்டு கஃபன் துணிக்கு மணமூட்ட வேண்டும். மய்யித்தின் மீசை, நகம் போன்றவை நீண்டு வளர்ந்திருந்தால் அதை வெட்டிக் குறைக்க வேண்டும். தலையை வாரிவிடத் தேவையில்லை. பெண் மய்யிதின் தலை முடியை மூன்று சடைகள் போட்டு பின் புறம் தொங்கவிட வேண்டும்.**

**4. கஃபனிடுதல்: சட்டை, தலைப்பாகை இன்றி மூன்று வெள்ளைத் துணிகளால் ஆண் மய்யித்தை கஃபனிடுவது சிறந்தது. அவற்றை ஒன்றின் மேல் ஒன்றாகச் சுற்ற வேண்டும். ஒரு வேஷ்டி, ஒரு சட்டை, ஒரு சுற்றுத் துணி கொண்டு கஃபனிட்டாலும் பரவா யில்லை. பெண் மய்யித்தை ஐந்து துணிகளால் கஃபனிட வேண்டும். அவை, ஒரு மேலங்கி, ஒரு முந்தானை,**

ஒரு கீழாடை, இரண்டு முழு சுற்றுத் துணிகள். ஆண் குழந்தையை ஒன்று முதல் மூன்று துணிகளால் க∴பனி டலாம். பெண் குழந்தையை ஒரு மேலங்கி, இரு சுற்றுத் துணிகளால் க∴பனிட வேண்டும்.

எந்த மய்யித்தாக இருந்தாலும் அதை க∴பன் செய்வதற்கு அதனை முழுமையாக மூடி மறைத்துக் கொள்ளும் வகையில் ஒரு சுற்றுத் துணி இருப்பது கடமையாகும். என்றாலும் மய்யித் இஹ்ராம் அணிந்த நிலையில் இருந்தால் இலந்த இலை கலந்த தண்ணீரால் குளிப்பாட்டி அவரது வேட்டி, மேல் துண்டுடன் அல்லது வேறு இரு துண்டுகளுடன் க∴பனிடப்பட வேண்டும். தலையையும் முகத்தையும் மறைக்கக் கூடாது, மணம் பூசவும் கூடாது. ஏனெனில் அவர் கியாமத் நாளில் தல்பியா சொல்லியவாறு எழுப்பப்படுவார் என ஹதீஸில் வந்துள்ளது.

பெண் மய்யித் இஹ்ராம் அணிந்த நிலையில் இருந்தால் அதற்கு மற்ற பெண்களைப் போல் க∴பனிட வேண்டும். என்றாலும் மணம் பூசக் கூடாது. முந்தானையால் அவளின் முகத்தையும், கையுறைகளால் அவளின் கை களையும் மூடக் கூடாது. எனினும் பெண் மய்யித்தைக் க∴பனிடுவது பற்றி மேலே கூறப்பட்டதுபோல சுற்றுத்

துணியால் அவளின் முகத்தையும் இரு கைகளையும் மூட வேண்டும்.

5. மய்யித்தைக் குளிப்பாட்டவும் தொழவைக்கவும் அடக்கம் செய்யவும் மிகத் தகுதியானவர் அவரால் வஸிய்யத் செய்யப்பட்டவர். அதன் பிறகு அவரது தந்தை, பின்பு அவரது பாட்டனார். அதன் பிறகு அவரது நெருங்கிய உறவினர்கள். பெண்ணைக் குளிப்பாட்ட மிகத் தகுதியானவர் அவளால் வஸிய்யத் செய்யப் பட்டவள். பிறகு அவளது தாய், பின்பு பாட்டி, அதன் பிறகு அவளுக்கு நெருக்கமான பெண் உறவினர்கள்.

கணவர், மனைவியரில் ஒருவர் மற்றவரைக் குளிப் பாட்டலாம். ஏனெனில் அபூபக்கர் சித்தீக்(ரலி)அவர்கள் தமது மனைவியைக் குளிப்பாட்டியுள்ளார்கள். அலீ (ரலி) தமது மனைவி ஃபாத்திமா(ரலி)வைக் குளிப்பாட்டி யுள்ளார்கள்.

6. மய்யித்துக்குத் தொழவைக்கும் முறை: நான்கு தக்பீர்கள் சொல்ல வேண்டும். முதல் தக்பீருக்குப் பிறகு சூரத்துல் ஃபாத்திஹா ஓத வேண்டும். அத்துடன் ஒரு சிறிய சூராவை அல்லது ஒன்றிரண்டு ஆயத்துகளை ஓதிக்கொண்டால் நல்லது. இது குறித்து வந்துள்ள இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கும் ஹதீஸ் இதற்கு ஆதார மாகும். பின்பு இரண்டாம் தக்பீர் கூறி அத்தஹிய்யாத்தில்

**ஓதுவது போல நபி(ஸல்) அவர்கள் மீது ஸலாவாத்து ஓத வேண்டும். பின்பு மூன்றாவது தக்பீர் கூறி**

اَللَّهُمَّ اغْفِرْ لِحَيِّنَا وَمَيِّتِنَا وَشَاهِدِنَا وَغَائِبِنَا وَصَغِيرِنَا وَكَبِيرِنَا وَذَكَرِنَا وَأُنْثَانَا، اَللَّهُمَّ مَنْ أَحْيَيْتَهُ مِنَّا فَأَحْيِهِ عَلَى الإِسْلامِ وَمَنْ تَوَفَّيْتَهُ مِنَّا فَتَوَفَّهُ عَلَى الإِيْمَانِ ، اَللَّهُمَّ اغْفِرْ لَهُ وَارْحَمْهُ وَعَافِهِ وَاعْفُ عَنْهُ وَأَكْرِمْ نُزْلَهُ وَوَسِّعْ مُدْخَلَهُ وَاغْسِلْهُ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدْ وَنَقِّهِ مِنَ الذُّنُوْبِ والْخَطَايَا كَمَا يُنَقَّى الثَّوْبُ الأَبْيَضُ مِنَ الدَّنَسِ وَأَبْدِلْهُ داراًخَيْراً مِنْ دَارِهِ وَأَهْلاً خَيْراً مِنْ أَهْلِهِ وَأَدْخِلْهُ الْجَنَّةَ وَأَعِذْهُ مِنْ عَذَابِ الْقَبْرِوَعَذَابِ النَّارِ وَافْسَحْ لَهُ فِي قَبْرِهِ وَنَوِّرْ لَهُ فِيْهِ اَللَّهُمَّ لا تَحْرِمْنَا أَجْرَهُ وَلا تُضِلَّنَا بَعْدَهُ.

**அல்லாஹ"ம் மக்ஃபிர் லிஹய்யினா வமய்யிதினா வஷா ஹிதினா வகாயிபினா வஸகீரினா வகபீரினா வதகரினா வஉன்ஸானா. அல்லாஹ"ம்ம மன்அஹ்யய்த்தஹ" மின்னா ஃபஅஹ்யிஹி அலல் இஸ்லாம் வமன் தவஃப் ஃபைத்தஹ" மின்னா ஃபதவஃப்ஃபஹ" அலல் ஈமான்,**

**அல்லாஹ"ம் மஃக்ஃபிர் லஹ" வர்ஹம்ஹ" வஆஃபிஹி வஅஃபு அன்ஹ" வஅக்ரிம் நுஸ்லஹ" வவஸ்ஸிஃ முத்கலஹ" வஃக்ஸில்ஹ" பில்மாயி வஸ்ஸல்ஜி வல்பரத், வனக்கிஹி மினத் துனூபி வல் கதாயா கமா யுனக்கஸ் ஸவ்புல் அப்யழு மினத்தனஸ், வஅப்தில்ஹ" தாரன் கைரம் மின் தாரிஹி, வஅஹ்லன் கைரம் மின்**

அஹ்லிஹி, வஅத் கில்ஹுல் ஜன்னத்த, வஅஇத்ஹு மின் அதாபில் கப்ரி, வஅதாபின்னார்,

வஃப்ஸஹ் லஹு ஃபீ கப்ரிஹ், வநவ்விர் லஹு ஃபீஹி அல்லாஹும்ம லாதஹ்ரிம்னா அஜ்ரஹு வலா துழில்லனா பஃதஹு.

பின்பு நான்காவது தக்பீர் கூறி வலப்புறம் ஒரே ஒரு ஸலாம் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு தக்பீருக்கும் கைகளை உயர்த்துவது விரும்பத்தக்கதாகும்.

மய்யித் பெண்ணாக இருந்தால் அல்லாஹும் மக்ஃபிர் லஹா என்றும் இரு மய்யித்துகள் என்றால் அல்லாஹும் மக்ஃபிர் லஹுமா என்றும் பல மய்யித்துகளிருந்தால் அல்லாஹும் மக்ஃபிர்லஹும் என்றும் கூற வேண்டும்.

சிறு குழந்தையாக இருந்தால் பாவமன்னிப்புக் கேட்கும் பிரார்த்தனைக்குப் பதிலாக

اَللَّهُمَّ اجْعَلْهُ فَرَطًا وَذُخْرًا لِوَالِدَيْهِ وَشَفِيعًا مُجاباً اَللَّهُمَّ ثَقِّلْ بِهِ مَوازِيْنَهُمَا وَأَعْظِمْ بِهِ أُجُوْرَهُمَا وَأَلْحِقْهُ بِصَالِحِ سَلَفِ الْمُـؤْمِنِيْنَ وَاجْعَلْهُ فِي كَفَالَةِ إِبْرَاهِيْمَ عَلَيْهِ السَّلام وَقِهِ بِرَحْمَتِكَ عَذَابَ الْجَحِيْمِ

அல்லாஹும் மஜ்அல்ஹு ஃபரதன் வதுஹ்ரன் லிவாலிதைஹி வஷஃபீஅன் முஜாபன், அல்லாஹும்ம ஸக்கில் பிஹி மவாஸீனஹுமா, வஅஃழிம் பிஹி உஜூர

**ஹுமா, வஅல்ஹிக்ஹு பிஸாலிஹி ஸலஃபில் முஃமினீன், வஜ்அல்ஹு ஃபீ கஃபாலத்தி இப்றாஹீம அலைஹிஸ் ஸலாம், வகிஹி பிரஹ்மத்திக அதாபல் ஜஹீம்.**

**தொழவைப்பவர் ஆண் மய்யித்தின் தலைக்கு நேரா கவும், பெண் மய்யித்தின் நடுப்பகுதிக்கு நேராகவும் நிற்பது நபிவழியாகும். பல மய்யித்துகள் இருந்தால் இமாமுக்கு முன்னால் ஆண் மய்யித்தையும் அதற்குப் பின்னால் பெண் மய்யித்தையும் வைக்க வேண்டும். அத்துடன் குழந்தைகளின் ஜனாஸாவும் இருந்தால் பெண் ஜனாஸாவுக்கு முன் ஆண் குழந்தையின் ஜனா ஸாவையும் பெண் ஜனாஸாவுக்கு பின்னால் பெண் குழந்தையின் ஜனாஸாவையும் வைக்க வேண்டும். அந்த நேரத்தில் ஆண் குழந்தையின் தலைப் பகுதி ஆண் மய்யித்தின் தலைப் பகுதிக்கு நேராகவும் பெண் மய்யித்தின் நடுப்பகுதி ஆண் மய்யித்தின் தலைக்கு நேராகவும் இருக்க வேண்டும். இவ்வாறே சிறுமியின் தலைப் பகுதி பெண் மய்யித்தின் தலைக்குப் பகுதிக்கு நேராக இருக்க வேண்டும். தொழக்கூடியோர் அனைவரும் இமாமுக்குப் பின்னால் நிற்க வேண்டும். ஒருவருக்கு மட்டும் நிற்க இடமில்லை எனில் அவர் இமாமின் வலது பாகத்தில் நிற்க வேண்டும்.**

---------------------------------------------

(முதல் துஆவின் பொருள்: யா அல்லாஹ்! எங்களில் வாழ்ந்து கொண்டிருப்போரையும் மரணித்துவிட்டவர் களையும் இங்கு வந்திருப்போரையும் வராமலிருப் போரையும் எங்களில் சிறியோர், பெரியோர், ஆண்கள், பெண்கள் ஆகிய அனைவரையும் மன்னித்தருள் வாயாக! யா அல்லாஹ்! எங்களில் யாரை உயிர் வாழச் செய்கிறாயோ அவர்களை இஸ்லாமிய அடிப் படையில் வாழச் செய்வாயாக! எங்களில் யாரை மரணிக்கச் செய்கிறாயோ அவர்களை ஈமானுடன் மரணிக்கச் செய்வாயாக! யா அல்லாஹ்! இவரை மன்னிப்பாயாக! இவருக்கு அருள் புரிவாயாக! இவரது பிழைகளைப் பொறுத்து சுகமளிப்பாயாக! இவரது தங்குமிடத்தை மதிப்பு மிக்கதாக ஆக்குவாயாக! இவர் புகுமிடத்தை (மண்ணறையை) விசாலமாக்குவயாக! பனிக்கட்டி, ஆலங்கட்டி மற்றும் தண்ணீரால் இவரைக் கழுவுவாயாக! வெண்ணிற ஆடை அழுக்கிலிருந்து தூய்மைப்படுத்தப்படுவதுபோல பாவங்களிலிருந்தும் தவறுகளிலிருந்தும் இவரைத் தூய்மைப்படுத்துவாயாக. இவரது இல்லத்தை விட சிறந்த இல்லத்தை, இவரது குடும்பத்தை விட சிறந்த குடும்பத்தை இவருக்கு ஏற்படுத்துவாயாக! இவரை சொர்க்கத்தில் நுழையச் செய்து கப்ருடைய வேதனை, நரக வேதனையை விட்டும் இவரைப் காப்பாற்றுவாயாக. இவரது கப்ரை விசாலப்படுத்துவாயாக. அதில் ஒளியை நிறப்புவாயாக. யா அல்லாஹ்! இவரின் கூலியை விட்டும் எங்களைத்

தடுத்து விடாதே! இவருக்குப் பின் எங்களை வழிதவறச் செய்து விடாதே!)

(இரண்டாம் துஆவின் பொருள்: யா அல்லாஹ்! இந்தக் குழந்தையை முன்னரே சென்று, தன் பெற்றோருக்காக விருந்துபசாரம் தயார் செய்யக்கூடியதாகவும் பொக்கிஷ மாகவும் ஆக்கியருள்வாயாக. மேலும் ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய வகையில் பரிந்துரை செய்யக்கூடியதாகவும் ஆக்குவாயாக! யா அல்லாஹ்! இந்தக் குழந்தையின் மூலம் அதன் பெற்றோரின் தராசைக் கனப்படுத்து வாயாக! மேலும் அவர்களின் நற்கூலியை அதிகமாக்கு வாயாக! இக்குழந்தையை முந்திச் சென்றுவிட்ட நல்ல முஃமின்களுடன் சேர்ப்பாயாக! இந்தக் குழந்தையை இப்ராஹீம் (அலை) அவர்களின் பராமரிப்பில் ஆக்கு வாயாக! மேலும் உன் அருளின் மூலம் இக்குழந்தையை நரக வேதனையை விட்டும் பாதுகாப்பாயாக!)

**وصلى الله وسلم وبارك على نبينا محمد وعلى آله وصحبه أجمعين**